UNIVERSITY OF JAFFNA
LIBRARY
01 JAN 2002
PERIODICALS DIVISION

# செஞ்சக்தி

2001 ஒக்டோபர்
அணி 04 படை 12
நன்கொடை 7.00 ரூபாய்

செய்திப் பத்திரிகையாக இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகப்பூர்வ செய்தித்தாள்.

## போலி சுயாதீன ஊடகங்களுக்கு சவால்!

போலித்தனமான சுயாதீனம் பேசும் பிழைப்புவாத ஊடகத்துறையினரை நோக்கி மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி சவால் விடுத்திருக்கிறார், இலங்கையின் விளையாட்டுத் துறையில் சர்வதேச ரீதியாக கீர்த்தியை பெற்றுக்கொடுத்த சுசந்திக்கா ஜெயசிங்கா எஸ். பி. திசாநாயக்கா விளையாட்டு அமைச்சராக இருந்த காலகட்டத்தில் எதிர்நோக்கிய கெடுபிடிகள் அதற்கான காரணிகள் தொடர்பாக வெளியிட்ட செய்திகளை மீண்டும் வெளியிடுங்கள் எனவும் அமைச்சர் மஹிந்த விஜயசேகர 300 லட்சம் ரூபாவிற்கு கொழும்பில் வீடுவாங்கியது தொடர்பாகவும் அவரது கணக்குவழக்குகளை வெளியிடும்படியும் சுனில் கந்துன் நெத்தி சவாலில் கேட்டுக்கொண்டுள்ளார்.

குறிப்பாக ரி.என்.எல் .ஒளிபரப்புச்சேவை ஒளிபரப்பிய சுசந்திக்கா ஜெயசிங்க உடனான கலந்துரையாடலை மீண்டும் ஒளிபரப்பும் படியும் "ராவய" அந்த நாட்களில் எஸ். பி.க்கும் மஹிந்த விஜயசேகரவிற்கும் எதிராகத்தொடுத்த கட்டுரைகளை மீண்டும் வெளியிடுவார்களா? எனவும் சுனிச் ஹந்துன் நெத்தி சவால் விடுத்துள்ளார்

## நாட்டுக்காக – வெற்றி மக்கள் விடுதலை முன்னணிக்கு






மக்கள் விடுதலை முன்னணி எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு முதலாவது பிரச்சாரக் கூட்டத்தை கடந்த 17 ம் திகதி தெஹிவளை சந்தியில் நடத்தியது. பல்லாயிரக்கனக்கான மக்கள் திரண்டு மக்கள் விடுதலை முன்னணியின் வெற்றியை உறுதிப்படுதிதினர். வெள்ளமென திரண்டுவந்த மக்கள் கூட்டத்தையே பட்த்தில் காண்கிறிர்கள். இக்கூட்டத்திற்கு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்களான, தோழர்கள் டில்வின் சில்வா, விமல் வீரவங்ச, அனுர திஸாநாயக, நந்தன குணதிலக லால் காந்த, ஆகியோர் உட்பட மாகாணசப உறுப்பிர்களான தோழர் சந்திரசேகர், லக்ஷ்மன் நிபுணாராச்சி, கொழும்பு மாவட்டத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

# மக்கள் விடுதலை முன்னணியின் வெற்றி நிச்சயம்!

## தேசத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் நடைமுறைக்கு வருவது உறுதி!

இம்முறை பொதுத்தேர்தல் முடிவுகள் யாரும் எதிர்பார்க்காத விதமான சக்திவாய்ந்த மக்கள் அணிதிரள்வு மக்கள் விடுதலை முன்னணியை சூழ்ந்ததாக இருக்கும் என நாடுதழுவிய ரீதியில் குறிப்பாக கிராமப்புறங்களில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஒருமாதமும் ஐந்துநாள் ஆயுளைக்கொண்ட குறுகிய காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட "நன்நடத்தை" வேலைத்திட்டத்தின் காரணமாக மாபெரும் மக்கள் அணிதிரள்வு மக்கள் விடுதலை முன்னணியை நோக்கியதாக காணப்படுகின்றது. என அறிய முடிகின்றது. மக்கள் விடுதலை முன்னணியை வலுவான சக்தியாக கட்டியெழுப்புவதன் மூலம் மக்கள் பல்வேறு நலன்களை பெறமுடியும் என்ற கருத்து மக்கள் மத்தியில் வலுவாக காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

தேர்தல் இயக்கம் ஆரம்ப மாவதற்கு முன்பதாகவே மக்கள் ஆதரவும் மக்கள் விடுதலை முன்னணியின் பக்கம் திரும்பி யிருப்பதனால் மக்கள் விடுதலை முன்னணியின் வெற்றிக்கான அறிகுறிகளாக கொள்ளமுடியும் என பொதுவான பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்பதாக பல்கலைக்கழக பேராசிரியர்கள் சிலர் மாணவர்கள் ஊடாக நாடுதழுவிய ரீதியில் நடாத்திய கருத்தாய்வின்படி, வெளிப்பட்ட மக்கள் கருத்தானது நன்நடத்தை வேலைத்திட்டம் 60% க்கும் அதிகமான மக்கள் பிரிவின் ஆதரவை பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது. 17 வது அரசியல் யாப்பு சீதிருத்தம், விவசாயக்கடன் ரத்து போன்ற நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் பெருத்த வரவேற்பை பெற்றுள்ளதாக தெரியவருகின்றது. இவ்விதமாக மக்கள் நலன்களில் அக்கறை கொண்டுள்ள ம.வி.முன்னணி பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களை கொண்ட கட்சியாக இருக்கவேண்டும் என்பதே பொதுக்கருத்தாக வெளிப்படுத்தப் பட்டுள்ளதாகத் தொரிய வருகின்றது.

ஐ.தே.கட்சி சுயாதீன கணிப்பீட்டு நிலையம் ஒன்றின் ஊடாக மேற்கொண்ட மக்கள் கருத்துக் கணிப்பீட்டின் மூலம் தெரிய வருவதாவது. எதிர்வரும் பொதுத்தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்புரிமையின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்வடைவதை தடுக்கமுடியாது ஒன்றாகும். ம.வி.முன்னணியின் ஆதரவு இன்றி எந்தக்கட்சியும் ஆட்சி அமைக்கமுடியாத நிலையே ஏற்படும் என அந்த கருத்து கணிப்பீடு தெரிவிக்கின்றது. இந்தநிலையை மாற்றி அமைப்பதற்காக ஐ.தே.கட்சி தனக்காதரவான ஊடக நிறுவனங்கள் மூலமாக ம.வி. முன்னணிக்கு எதிராக அவதூறுகளை பரப்பும் திட்டங்களை முன்னெடுத்து

7ம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல் . ரி . ரி. ஈ அமைப்பினால் கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டிக்கிறோம

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் அமைப்பு எல் . ரி . ரி. ஈ இயக்கத்தினரால் கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டிப்பதோடு வட மாகாணத்திலிருந்து கிழக்கு மாகாணத்தை பிரிப்பதையும் சர்வஜன வாக்கெடுப்பின்றி பலாத்காரமானமுறையில் கிழக்குப்பிரதேசத்தை வடக்குப்பிரதேசத்துடன் இணைக்க எடுக்கும் சகல முயற்சிகளையும் தோற்கடிப்பதற்கு தம்முடன் இணைந்து போராடுமாறு வேண்டுகோள்விடுக்கின்றது. ம . வி . மு. அரசியற் குழுவினரால் கடந்த செப்டம்பர் மாதம் 12 ம் திகதி வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கை வருமாறு.

இலங்கையை இரண்டாகப்பிரித்து வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வேறு தனி இராட்சியத்தை அமைப்பதற்காக போராடும் எல் . ரி . ரி . ஈ கடந்த காலம் முழுவதும் வடக்கு கிழக்கு மற்றும் அவற்றை அண்டிய கிராமங்களில் வாழ்ந்த சிங்கள , முஸ்லிம் மக்களை துன்புறுத்தி அவர்களின் கிராமங்களில் இருந்து வெளியேற்றியதை யாரும் மறந்திருக்கமாட்டார்கள். தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடுகின்றோம் என்று கூறும் எல் . ரி . ரி . ஈ அப்பாவி சிங்கள , முஸ்லிம் மக்களை மாத்திரமின்றி தமிழ் மக்களையும் தமிழ்தலைவர்களையும் கொன்றொழித்தது அவர்களின் கற்பனை ஈழத்திற்காகத்தான். இதற்கு மேலதிகமாக கிழக்கிலங்கையில் வாழும் சாதாரண மக்களைக் கடத்திச் செல்வது மீனவர்களின் இயந்திரப்படகுகளையும் கடத்திச் செல்வது , கப்பம் பெறுவது போன்ற மக்களைத் துன்புறுத்தக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுவது தமிழ் மக்களின் விடுதலை என்ற பேரினாலாகும். எந்தவொரு அரசாங்கத்தினாலும் தமிழ்மக்கள் துன்பத்திற்கு உள்ளாக்கப்படுவதும், நிராயுத அப்பாவி தமிழ்மக்கள் கொலை செய்யப்படுவதும் பாரிய குற்றமென்றால் எல் . ரி . ரி. ஈ இயக்கம் நிராயுத மற்றும் அப்பாவி சிங்கள , முஸ்லிம் மக்களை துன்புறுத்துவதும் பாரிய குற்றமாகும். விசேடமாக கடந்த தற்போதைய காலங்களில் கிழக்குப்பிராந்தியத்தில் முஸ்லிம் மக்களுக்கு எல் . ரி . ரி . ஈ இயக்கத்தினரால் துன்புறுத்தல்கள் . அச்சுறுத்தல்கள் , இம்சைகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன மூதூர் பிரதேசத்தில் முஸ்லிம் மக்கள் இந்த இம்சைகளுக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அப்பாவி மக்களை துன்பத்திற்குள்ளாக்கின்ற எல் . ரி . ரி . ஈ இயக்கம் இன்னும் சிலருக்கு விடுதலை இயக்கமாகத் தெரிவது வியக்கத்தக்க ஒரு காரணமாகும். தமிழ்மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பது என்ற வாசகத்துக்குள் மறைந்து எல் . ரி . ரி . ஈ இயக்கத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் அதற்கு உதவிசெய்யும் உள்நாட்டு , வெளிநாட்டு சக்திகள் தமிழ் மக்களின் மனித உரிமைகளுக்காக வரிந்து கட்டும் (அதிக கவனம் செலுத்தும்) உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் அந்தக் கவனத்தை முஸ்லிம் மக்களின் மனித உரிமைகளுக்காக செலுத்தாதது புதினப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

கிழக்குப்பிராந்தியத்தில் நிராயுத மக்களுக்கு எதிராக எல் . ரி . ரி . ஈ இயக்கம் தாக்குதல் மற்றும் தொல்லைகளை கடுமையாக கண்டிக்கின்ற நாம் அந்த அநாகரிகமான செயல்களை நிறுத்துவதற்கு எல் . ரி . ரி . ஈ இயக்கத்தை வற்புறுத்துமாறு அனைத்து மனித உரிமை அமைப்புக்களிடமும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தமிழீழக் கற்பனை நிரந்தரமாக நிறைவேறும் தினத்தில் (அதுஉண்மையாவதில்லை அது நிறைவேற இடமளிக்கக்கூடாது) பிரிவினைவாத , தீவிரவாத ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டால் அவ்வாறு நிகழ்வதற்கு நாம் இடம்கொடுத்தால் வடக்குக்கிழக்கு பிரதேசங்களில் வாழ்க்கை நடாத்தும் நிராயுத , அப்பாவி சாதாரண மக்கள் , எதிர்காலத்தில் முகங்கொடுக்க இருக்கும் தொல்லைகள், அச்சுறுத்தல்களின் அறிகுறி இங்கு தெளிவாக தெரிகின்றது. இந்த நிகழ்வை இலேசாக நிறுத்தி ஒதுக்கிவிட முடியாது வடக்குப்பிரதேசத்தை முஸ்லிம் , சிங்கள மக்களுக்கு இழக்கச்செய்து அதற்காக இனப்பிரச்சனைக்காக யுத்தத்தை மேற்கொண்டு சர்வதேச நீதி மன்றத்தில் தண்டணை பெற எல்லாத் தகமைகளையும் பெற்றுள்ள இயக்கத்தினால் கிழக்குப்பிரதேச மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி சமாதானமாக வாழ்வதற்கு இடமளிக்கப்படும் என்ற போலி மாயையை உடனடியாக ஒதுக்கி விடவேண்டும்.

ஜே.ஆர் ,தொண்டமான் அரசாங்கம் கிழக்கு பிரதேசத்தை வடக்கு பிரதேசத்துடன் இணைத்தது தற்காலிகமாகத்தான் அந்தத் தற்காலிக நிலை அன்று அனைத்து பிரிவுவாத அமைப்புக்கள் அக்காலத்தில் இடைத்தரகராக கடமையாற்றிய கடமையாற்றிய இந்திய அரசும் ஏற்றுக்கொண்டதை நாம் ஏற்றுக்கொண்டதை நாம் நினைத்துப்பார்க்கவேண்டும். வடக்குப்பிரதேசத்துடன் கிழக்குப்பிரதேசத்தை இணைப்பது சம்பந்தமாக சர்வஜன வாக்கெடுப்பை நடாத்த வேண்டும் என்பதை அன்று சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொண்டதை இங்கு கவனத்தில் எடுப்போம்.

இவ்வேளையில் அந்த சர்வஜன வாக்கெடுப்பு ஓரங்கட்டப்பட்டுவிட்டது. கிழக்குப்பிரதேசத்தை மீண்டும் வேறாக்கமுடியாத வகையில் வடக்குடன் இணைக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ளவேண்டும். என தமிழ் பிரிவினைவாத இயக்கம் அரசாங்கத்தை வலியுறுத்திவருகின்றது. கிழக்குப்பிரதேசம் , வடக்குப்பிரதேசத்துடன் சிறிது காலத்திற்கு இணைக்கப்பட்டது ஒருதலைப்பட்சமான முறையிலேயாகும் அன்றி கிழக்கு வாழ் மக்களிடம் அது சம்பந்தமாக அவர்களின் விருப்பு வெறுப்புக்களை கேட்டறிந்தல்ல. ஆதலினால் ம . வி . மு அன்றும் இந்த இணைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தது. இன்றும் நாளையும் விமர்சனத்துக்குள்ளாகக்கூடிய இணைப்பை அங்கீகரிப்பதில்லை ஒருதலைப்பட்ச இணைப்பினால் ஏற்படக்கூடிய பயங்கரமான மோதல்கள் பற்றி இப்போது நன்றாக உணர்ந்து கொள்ளலாம். கிழக்கு பிரதேசமக்கள் எதேச்சாதிகார பயங்கரவாத அமைப்பின் கீழ் துன்பப்படவேண்டியதில்லை.

ஆதலால் வடக்கிலிருந்து , கிழக்குப்பிரதேசத்தை வேறாக்குவதற்கும் , சர்வசனவாக் கெடுப்பின்றி பலாத்காரமின்றி கிழக்குப்பிரதேசத்தை , வடக்குப்பிரதேசத்துடன் இணைக்க எடுக்கும் அனைத்து முயற்சிகளையும் முறியடிப்பதற்கு அமைப்பு ரீதியாக ஒன்றிணைய வேண்டிய தருணம் வந்துவிட்டது. அது காலம் தாழ்த்தாது நிறைவேற்றப்படவேண்டியதொன்றாகும். அதற்காக ம.வி.மு .(முன் நிற்கின்றது) ம . வி . மு யுடன் இணைந்து தமது உரிமைகளுக்காக போராடுமாறு கிழக்குப்பிராந்திய தமிழ் , முஸ்லிம் , சிங்கள மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

## அமெரிக்க ஐக்கிய நாடு தமது வெளிநாட்டுக்கொள்கைகளை உடனடியாக மாற்றியமைக்கவேண்டும். அமெரிக்காவினுள் நிகழ்ந்த மனிதப் படுகொலையைக் கண்டித்து

### ம.வி.மு. அரசியற் குழு அறிக்கை

கடந்த செப்டம்பர் 11 ம் திகதி அமெரிக்காவின் முக்கிய இடங்கள் மீது தாக்குதல் நடத்தி பல்லாயிரக்கணக்கான மக்களை படுகொலைசெய்த சம்பவமானது, ஐக்கிய அமெரிக்க நாடு வியட்நாமில் செய்தது போன்றும் பல்வேறு நாடுகளில் மிகப்பாரியஅளவு மனிதப் படுகொலைகள் போன்றும் இந்த மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டிப்பதுடன் தனது நிலைப்பாட்டை ம. வி . மு யின் அரசியற் குழுவினால் கடந்த செப்டம்பர் மாதம் 12 ம் திகதி வெளியிட்ட பத்திரிகை அறிக்கை வருமாறு.

2001 செப்டம்பர் 11 ம் திகதி அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முக்கிய இடங்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்கள் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்கள் பலியெடுக்கப்பட்டுள்ளன அமெரிக்க ஐக்கிய நாடுகள் வியட்நாமைப்போன்றே பல்வேறு நாடுகளிலும் மிகப்பாரிய அளவில் மனிதப்படுகொலைகளை நிகழ்திய சந்தர்ப்பங்களைப்போன்றே இவ்வேளையில் இச்செயலை கடுமையாக கண்டிப்பதாக ம.வி.மு. அரசியல் குழு தீர்மானித்துள்ளது.

அமெரிக்கா ஐக்கிய நாடுகளுக்கு மற்றும் மற்றைய எல்லா நாடுகளில் அது நிறுத்தி வைத்திருக்கும் இராணுவப்பிரிவுகள் , நடாத்திக்கொண்டு செல்லும் வேறுகாரியங்கள் (நடவடிக்கைகள்) எந்நேரமும் அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்து கொண்டிருப்பது அதனால் என்பதை அந்நாட்டு மக்களும் , தலைவர்களும் கடுமையாக சிந்திக்க வேண்டும்.

அமெரிக்கா ஐக்கிய நாட்டு இராணுவம் வியட்நாமில் நடாத்திக்கொண்டு சென்ற ஆக்கிரமிப்பு யுத்தத்தினால் தோல்விகண்டு 1957 காலப்பகுதிகளில் அமெரிக்கா ஐக்கிய நாடு வியட்நாம் அதுவரை பின்பற்றிவந்த சந்தர்பவாத வெளிநாட்டுக்கொள்கைகளை முழுமையாக மாற்றிஅமைத்தது. சாதாரண வாழ்கை , ஜனநாயகம் , சமத்துவம் மனித உரிமையின் அடிப்படையில் அமைந்த வெளிநாட்டுக் கொள்கைகளை வகுத்துக்கொள்ளவேண்டும். ஆனால் அது நடைபெறாததன் பிரதிபலனை கடந்த 27 வருடங்களாக உலகத்திற்கு சான்று பகருகின்றது.

இவ்வேளையில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் இராஜதந்திர முறையில் உலகத்தினுள் சிக்குண்டு இருக்கின்றது. பல்வேறுபட்ட இக்கட்டான சந்தர்ப்பங்களில் அதனுடன் ஒன்றிணைந்து ஒன்றுபட்டு செயற்படுவது பிரசித்தமற்ற ஏகாதிபத்தியவாத நிர்வாக , சியோனிசவாத தலைவர்கள் மாத்திரமே அதுசம்பந்தமாக அமெரிக்கா ஐக்கிய நாடுகள் மீண்டும் மீண்டும் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

ஒரு காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் தூரநோக்குள்ள சிறந்த புத்திஜுவிகள் , கல்விமான்கள் பெரும் எண்ணிக்கையானோர் தமது தலைவர்களின் தூர நோக்கற்ற வெளிநாட்டு கொள்கைகளை விமர்சித்து அதற்கு கடுமையான எதிர்ப்புக்களை தெரிவித்துள்ளனர். ஆனால் அந்த எதிர்ப்பு பற்றி தலைமைத்துவம் அவ்வளவு அக்கறை காட்டியதாக தெரியவில்லை. ஆதலினால் ஐ.அமெ.யுத்த நடவடிக்கைகளுக்காக வரி செலுத்தும் பொதுமக்களும் அங்குள்ள புத்தி ஜீவிகளும் இணைந்து அன்று வியட்நாம் யுத்தத்திற்கு எதிராக வீதியில் இறங்கி அமைதியாக எதிர்ப்பை காட்டினர். ஐ.அமெ.தனது வெளிநாட்டுக் கொள்கைகளை மாற்றியமைப்பது தீவிரவாதத்தின் உண்மையை அடைவது தோல்வியால் அதனால் உலகிலுள்ள அனைத்து மக்களினதும் ஆதரவை பெற முடியும். ஐ.அமெ.தற்போது நடைமுறைப்படுத்திவரும் ஏகாதிபத்தியவாத இருவழிக்கொள்கை பயனுள்ள நல்ல நிலைக்குத் திரும்பினால் ஐ.அமெ.மாத்திரமல்ல இலங்கையுட்பட உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் நடைபெற்றுவரும் தீவிரவாத நடவடிக்கைகளை தவிர்த்து நிறுத்த உலகம் பூராகவும் உள்ள மக்கள் ஒன்றிணைந்து செயற்படுவார்கள். என்பது எமது அசையாத நம்பிக்கையாகும். உலகத்தை மனிதனுக்கு ஏற்றவிதமாக பயனளிக்கக்கூடிய விதத்தில் மாற்றியமைக்க ஐ.அமெரிக்காவுக்கு வேண்டுமானால் அதனிடமிருக்கும் அனைத்து விஞ்ஞான தொழில்நுட்ப பொருளாதார ஆற்றல்களை பயன்படுத்த முடியும். அவ்வாறு நடைபெற்றால் ஐ.அமெரிக்காவுக்கு தடங்களுமின்றி (எதிர்ப்புக்களுமின்றி) உலகின் தலை சிறந்த தலைவனாக மாறமுடியும்.

2001.09.11 ம் திகதி நடைபெற்ற மக்கள் அழிவை மீண்டும் கண்டிக்கின்ற நாம் உயிரிழந்த அப்பாவி மக்களின் குடும்பங்களுக்கு எங்களின் அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

*3ம்பக்கத்தொடர்........*

*ஆட்சியதிகாரம்....*

இங்கு முக்கியமாக கவனிக்கவேண்டியது தேசத் துரோக இனவாத யானை-புலி கூட்டானது தனது முழுப்பலத்தையும் பிரயோகித்து ,எதிர்வரும் தேர்தலில் ஆட்சி அதிகாரத்த கைப்பற்ற முடியுமா?என்பதை விட இதனால் எழக்கூடிய பிரச்சனையானது பலவீனமான பொ.ஐ. முன்னணியினால் அரச இயந்திரத்தை கொண்டு செல்ல முடியுமா? என்பதாகும் இன்றைய பொது மக்களின் பொதுவான கருத்துக்கேற்ப மிகத் தெளிவாக காணக்கூடிய பிரச்சினை தான் ,இவர்கள் இருவரும் எதிர்பார்க்கும் இலக்கை ஒரு போதும் எட்ட முடியாததென்பதாகும். இவர்கள் இருவருக்கும் இடையில் ,இந்த தேர்தலில் பிரதான சக்தியாகக் காணப்படுவது ம.வி. முன்னணி மீதாக தொடுக்கப்பட்ட அவதூறுகள் மடிந்து போயின தற்போது மக்கள் விடுதலை முன்னணியை சூழ நாடு தழுவியரீதியில் மக்கள் பெருமளவில் அணிதிரண்டுள்ளனர். எனவே அமையப்போவது ம.வி முன்னணிஆட்சி அல்லது ம.வி முன்னணியினால் ஆட்டிப்படைக்கும் ஆட்சியாகும். அதாவது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் தேவையான உரிமைகளை வென்றெடுக்கும் "தகுதிகான்" நிலைமையாகும். இந்த நன்னடத்தைக்கு கீழ்படியுமா? அல்லது பொ.ஐ முன்னணி- ஐ.தே. கட்சி கூட்டா என்பதை முடிவு செய்வதற்கான காலம் இன்னமும் கடந்து விடவில்லை . இந்த வகையில் இம் முறை பொதுதேர்தல் அதி முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தனது சக்தியை பல மடங்கு பெருக்கிக் கொண்ட அரசியல் இயக்கமாக ம.வி.முன்னணி மலர்வது உறுதியாகிவிட்டது. இதேபோல் ஏனைய அரசியல் கட்சிகள் ம.வி.முன்னணியை சுற்றிவரும் நிலையையும் ஏற்படுத்தப் போவது இத் தேர்தல் முடிவேயாகும். 2001 ம் ஆண்டு பொதுத் தேர்தல் வாக்குகள் சாதிக்கப் போவது இதைத் தவிர வேறொன்றுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சக்தி

198-19 பஞ்சிகாவத்தை வீதி,கொழும்பு 10. தொலைபேசி 345594 E-mail-niyamua@isplanka.lk

மக்கள் விடுதலை முன்னணியின் சரவதேச தலைமைபீடத்தின் முகவரியும் தொலைமடல் இலக்கமும்

☆ ARUNODAYA, B.P. 485, 75528 PARIS, CEDEX 11,FRANCE,
FAX: 0033148260483
☆ P.O. BOX 194, CARNEGIE, VICTORIA 3163, AUSTRALIA,
FAX: 0061 3 94369312
☆ E-MAIL-JVP@i. bekkoame.ne.jp
☆ www.jvpsrilanka.com, www.jvpnet.com


## அரசியலில் நயவஞ்சகமா? நயவஞ்சகத்தில் அரசியலா?

இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளின்அரசியலில் நிறைந்து காணப்படுவது துர்குணங்கலேயாகும். துர்குணங்களில் நயவஞ்சகம் ஒரு மோசமான துர்குணமாகும். பண்பான அரசியலை உறுதிப்படுத்தும் அரசியலை உண்மையான மக்கள் சேவையாக மாற்ற முற்படும் போது தோற்கடிக்க வேண்டிய பிரதான துர்குணம் நயவஞ்சகமாகும். இங்கு அரசியலே நயவஞ்சகமாகக் காணப்படுவதனால் அதனை தோற்கடிப்பதற்காக பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும். சமூகங்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளானது அரசியலில் காணப்படும் நயவஞ்சகதனத்தை விட நயவஞ்சகமே அரசியலாக மாறியிருப்பதை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்

இலங்கையின் நீண்டகால அரசியல் வரலாற்றை நோக்கின் அரசியலில் நயவஞ்சகம் என்றநிலை மாறி நயவஞ்சகமே அரசியலாகிய காலகட்டங்களையே அதிகமாகக்காணமுடியும். முதலாளித்துவக் கட்சிகள் போலவே பல இடதுசாரி அமைப்புகளும் ஒருவருக்கொருவர் குறைந்தவர்க அல்ல என்ற விதமாகவே வந்துள்ளனர். 1947 பொதுத் தேர்தலில் ரெர்ஷ்கி வாதத்தை தோற்கடிப்பதற்காக கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் தமது வேட்பாளர்கள் போட்டியிடாத தொகுதிகளில் சமசமாஜக்கட்சிக்கு வாக்களிக்காது ஐ.தே.க. கட்சிக்கு வாக்களிக்கவேண்டும்

மக்கள் பிரிவினர், மக்கள் துரோக, சனநாயக விரோத அரசியல் மட்டுமல்லாது நய வஞ்சக அரசியலையும் கூட இனங்கண்டுள்ளனர் எனவே இவற்றை தோற்கடிப்பது மிகச் சுலபமானதாகு.

காது ஐ.தே.கட்சிக்கு வாக்களிக்கும்படி மக்களுக்கு அறிவுறுத்தும்படி தமது கட்சிக்காரர்களுக்கு உத்தரவிட்டிருந்தனர். இதேபோல் 1952களின் பொது தேர்தலின் பின் எதிர்கட்சி தலைவர் பதவியை சமசமாஜக் கட்சி தலைவர் என். எம். பெரேராவுக்கு வழங்காமல் பண்டாரநாயக்காவுக்கு கொடுப்பதில் முன்னணி வகுத்தவர்கள் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினரே. இவ்விதமாக பொறாமையும் நயவஞ்சகத்தனத்தையும் பழைய இடதுசாரி அமைப்புகளின் தரிகெட்ட போக்கை இனம்காட்டியிருந்தது.

புதிய அமைப்பாக மக்கள் விடுதலை முன்னணி வளர்ச்சி பெறத்தொடங்கிய காலகட்டத்திலும் பழைய இடதுசாரி அமைப்புகளிலிருந்து விலகிச்சென்ற "மக்களை" இடதுசாரி பட்டைகளுக்கு சொந்தமானவர்கள் தமது நயவஞ்சகப்போக்கையே வெளிப்படுத்திவர காணப்படுகிறார்கள் 1994களில் பொ.ஐ.முன்னணியுடன் ஒன்றிணைந்து ஆறு வருட காலம் பல்வேறு வாதப்பிரதிவாதங்களை பொ.ஐ.முன்னணிக்குள் கிளப்பிக்கொண்டிருந்தவர்கள் கூறுவதுபோல் இன்று பொ.ஐ.முன்னணியை தோற்கடிப்பதற்காக ஐ.தே.கட்சி மேடையில் வீற்றிருப்பதுதான் முற்போக்கு வாதமும் சனநயகமும் என்றாகிவிட்டது அதேவேளை நாட்டில் தோற்றம்பெட்ட அரசியல் அராஜகத்தின் ஊடாக பிற்போக்குவாதம் இலாபம் பெற முடியாத

விதமாக பலமற்ற பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தை ஒரு வருட காலத்துக்கு பொது நிகழ்ச்சி நிரலொன்றுக்கு உட்படுத்தி நாட்டு மக்கள் பிரிவினருக்கு சிறிய அளவிலான உரிமைகளை வென்று கொடுக்கும் விதமான செயல்பாட்டை பிற்போக்குவாதம் என கூறுகின்றனர். மிக அழகான கனவாக, மனக்கோட்டையாக காணப்பட்ட நிறைவேற்றிக்கொள்ள முடியாததெனவும் கருதப்பட்டதும் நாட்டு மக்கள் பிரிவினரின் அடிப்படை சனநாயக உரிமைகளை உரிய முறையில் வென்றெடுக்க ஏற்புடையதுமான சுயாதீன ஆணைக்குழுக்கள் பொ.ஐ.முன்னணியூடாக பாராளுமன்றத்தில் சமர்பித்ததும் பிற்போக்குவாதமே. எனக்கூறும்போது இங்கு நயவஞ்சகம் வெளியே பாய்வதை வெளிப்படையாகவே காணமுடிகிறது.

மரணித்துக்கொண்டிருக்கும் சனநாயகத்திற்காக ஐ.தே.கட்சி மேடையில் ஏறுவதற்கும் தயாரான இவர்களுக்கு தற்போது சனநாயகம் சுதந்திரமாக சுவாசிக்க ஏற்புடையதான சூழல் உறுவாக்கபட்டமையை ஜீரணிக்க முடியாமலுள்ளது. இதற்கான காரணம் சனநாயகத்தை பாதுகாத்த பெருமை மக்கள் வடுதலை முன்னணிக்கு கிடைத்து விட்டது எனபதினாலாகும். மறுபுறமாக அடுத்த பொதுத் தேர்தலில் பாராளுமன்ற பிரவேசம் செய்ய மற்றுமொரு முதலாளித்துவக் கட்சியுடன் இணைந்துகொள்ள இருந்த முக்கியத்துவம் வாய்ந்த காரணம் கைநழுவிபோய்விட்ட ஏமாற்றமேயாகும். இங்கும் நயவஞ்சகத்தனத்தின் வெளிப்பாட்டையே காணமுடிகிறது. ஐ.தே.கட்சி முதல் போலி சனநாயக வாதிகள் அனைவரது செயல்பாடுகளும் நயவஞ்சகத்தின் வெளிப்பாடாகும். பண்புகளை நிர்வாணமாக்கி சமுதாய பிரச்சனைகளுக்கு சனநாயக வாதத்தை முன்வைத்தவர்கள் சுயாதீன ஆணைக்குழுக்கள் இல்லாமல் தேர்தலொன்று அர்தமற்றது என அழுது புலம்பியவர்கள் குறிப்பிட்ட ஆணைக்குழு விவகாரம் நடைமுறை படுத்திமாகியதும் பிசாசை கண்டு மிரண்டவர்கள் போலானது ஏன்?. நாட்டுக்கு தற்போது அவசியமானது சனநாயகமல்ல: உடனடியாக தீரகப்படவேண்டியது பொருளாதாரப் பிரச்சினையும், தேசிய பிரச்சினையுமே

எனக்கூறி ஆணைக்குழு விவகாரத்திலிருந்து நழுவிசெல்ல எத்தனித்தனர்.(ம.வி.முன்னணி தலையிட்டதனால் இறுதியில் ஒத்துப்போகவேண்டிய நிலைமை ஏற்பட்டது) அதனை குழப்பிவிட ஐ.தே.கட்சி முதல் எதிரணி கட்சிகள் செயலிபட்ட விதத்தை நோக்கும் போதும் நயவஞ்சகத்தனம் உள்ளங்கை நெல்லிக்கனியாக தெரிகிறது.

44ஆக இருந்த அமைச்சர்களின் எண்ணிக்கை 20ஆக குறைக்கப்பட்டது பற்றி அலட்டிக்கொள்ளாதவர்கள் 20ஆக இருக்கவேண்டியதை 21ஆக அதிகரித்தது பற்றியே உரத்துக் கூவத்தொடங்கியதும் நயவஞ்சகதனத்தின் வெளிப்பாடே. இதற்க்கடுத்ததாக இவர்கள் நீலிக்கண்ணீ வடித்தது அமைச்சர்கள் தொகை குறைக்கப்பட்டதனால் நிறந்தரச் செயலாளர்கள் பதவியிழந்து போகும் நிலைமை பற்றியாகும் சில மாதங்களுக்கு முன் 44அமைச்சர்கள் கொண்ட மாபெரும் மந்திரி சபை நடாத்திக் கொண்டிருக்கிறார்களே என பொ.ஐ.முன்னணி மீது குற்றம் சுமத்தியவர்களும் மேற்படி ஐயாமார்களேயாகும்


இவ்விதமாக இந்த நயவஞ்சக ஐயா மார்களின் கோபத்திற்கு காரணம் ஆட்சியை கைப்பற்றும் போராட்டத்திற்கு கோஷமாக தெரிவு செய்யப்பட்ட ஆணைக்குழுக்கள் நடைமுறை சாத்தியமாக நிறைவேற்றப் பட்டுவிட்டமெயேயாகும். இக்காரணியின் வெற்றி மக்கள் விடுதலை முன்னணிக்கு உரித்தாகியமேயாகும். இக் கோபத்தின் பிரதிபலிப்பு மக்களின் பக்கமாக இருந்து பார்க்கும் போது வெட்டவெளிச்சமாக காணமுடிந்ததொன்றுதான் அரசியல் கட்சிகள்: அரசியல்வாதிகள், சுயாதீன ஊடகங்களினதும் உண்மையான சுய ரூபம் இந்நாட்களில் வெளிப்படையாகவே காணக்கூடியதாக இருந்தது. அனைத்து கபடதனங்கள், நயவஞ்சகங்கள் வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதனாலாகும் தற்போது இந்நாட்டு மக்கள் பிரிவினர், மக்கள் துரோக, சனநாயக விரோத அரசியல் மட்டுமல்லாது நய வஞ்சக அரசியலையும் கூட இனங்கண்டுள்ளனர் எனவே இவற்றை தோற்கடிப்பது மிகச் சுலபமானதாகும்.

இந்நாட்டு அரசியல் வாதிகளின் உச்சக்கட்ட சுயநலத்தின் வெளிப்பாடாக மீண்டுமொரு பொதுத்தேர்தலுக்கு மக்கள் முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகி இருக்கிறார்கள்.ஆறு வருட காலத்திற்கான ஆட்சி ஒரு வருட காலத்தில் வீழ்த்தப்பட்டு மற்றுமொரு அவசரத் தேர்தலுக்குநாடு தள்ளப்பட்டதேன்? என்ற வினாவுக்கான உண்மையான விடை பரம இரகசியமானதாகும் பலவீனமான பொ.ஐ முன்னணி ஒரு வருட கால புரிந்துணர்வு வேலைத்திட்டத்திற்கு அடி பணியச் செய்து நாட்டு மக்களுக்கு குறிப்பிடக்கூடிய சில வெற்றிகளை பெற்றுக் கொடுப்பதுடன் நாட்டினதும், நாட்டு மக்களினதும் மறுதலிக்கப்பட்டு வரும் ஜனநாயக உரிமைகளை மீளக் கட்டியெழுப்ப ஏற்புடையதுமான வேலைத்திட்டமொன்றை வெற்றி பெறச் செய்யும் பகிரத முயற்சியில் ம.வி.முன்னணி ஈடுபட்டுக் கொண்டிருந்தனர் இவ் வேலைத் திட்டத்தால் அதிர்ச்சிக் குள்ளானவர்களே இந் நாட்டை மற்றுமொரு பொதுத் தேர்தலுக்கு தள்ளியோராகும் குறிப்பாக அமைச்சரவையை இருபதாக குறைப்பதும் ,17 வது அரசியல் யாப்பு திருத்த சட்டமூலத்தின் ஊடாக நாட்டு மக்கள் பிரிவினரின் ஜனநாயக உரிமைகளை பாதுகாத்தல் 20,000 ரூபா வரையிலான விவசாயக் கடன்களை ரத்துச் செய்தல் என அடுத்தடுத்து வெற்றிகளை நாட்டு மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதைக் கண்டு ஐ.தே.கட்சி அச்சமுற்றிருப்பதாக காணப்பட்டது. அரச வங்கிகளில் கோடிக்கணக்கான ரூபாய்களை கடனாகப் பெற்ற பெரும் பணக்கார முதலைகள் அவற்றை மீளச் செலுத்தாது "டிமிக்கி" கொடுத்துக்கொண்டிருந்தனர். இவ்வாறான கில்லாடிகளை வளைத்துப் பிடிப்பதற்கான சட்ட மூலமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க தயாரான போது ,இதனை தோற்கடித்து தமது மோசடிகளில் இருந்து தப்பித்துக் கொள்ள ஏற்புடையதாக பொ.ஐ. முன்னணியில் இருந்த ஊழல், மோசடி பேர்வழிகளை விலைக்கு வாங்கும் படலம் ஆரம்பிக்கப்பட்டது 17வது திருத்த சட்ட மூலத்தின் ஊடாக நிர்மாணிக்கப்படவிருந்த அரசியலமைப்பு பேரவையை ஸ்தாபிக்கும் வரையேனும் பொறுத்துக் கொள்ள ஐ.தே.கட்சிக்கு முடியாமல் போனது, இந்த மோசடிக் கூட்டத்தை பாதுகாத்துக் கொள்வதற் காகவேயாகும்.


எது எவ்வாறாயினும் தற்போது நாடு மற்றுமொரு பொதுத் தேர்தலை எதிர் கொள்ளத் தயாரராகிவிட்டது . இலங்கை வாழ் மக்கள் தமது எதிர்கால ஆட்சியை தீர்மானிக்கின்ற சந்தர்ப்பத்தை பெற்றிருக்கிறார்கள் ஐ.தே.கட்சி தனது முழுபலத்தையும் பிரயோகித்து தேர்தலை எதிர்கொள்ள தயாராகி வருகிறது. அதாவது

## ஆட்சி அதிகாரம் யாருக்கு?





எந்த வழியிலாவது ஆட்சியை கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்பதே அவர்களது திட்டமாகும். இதனடிப்படையிலேயே யானை-புலி- நரி- கூட்டை நிறுவியுள்ளது . அது ரணில்-பிரபா-எஸ்.பி கூட்டெடன குறிப்பிட்டாலும் அது தவறாகாது .புலிகள் இயக்கத்தின் ஆயுத பலத்துக்கு முன் மண்டியிட்டுள்ள த.வி.கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர் எல்.எப் (சுரேஷ்அணி)மற்றும் அ.இ.த. காங்கிரஸ் போன்ற தமிழ் இனவாதக்கட்சிகள் ,ஐ.தே.கட்சி தலைமையில் அணி திரண்டுள்ளன. கிழக்கு மாகாணத்தில் தனி முஸ்லிம் மாவட்டம் கோரிநிற்க்கும் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் போன்றோரும் ரணிலுடன் கூட்டணி அமைத்துள்ளனர் மறு புறமாக இந்நாட்டின் விளையாட்டு துறையில் நாட்டுக்கு கீர்த்தியை தேடித்தந்த சுசந்திகா ஜெயசிங்காவின் வாழ்க்கையில் அவரது வாழ்வில் பெரும் பூகம்பத்தை ஏற்படுத்தியதில் பிரதான சூத்திரதாரியும் "வேல்ட் டெல்" விளையாட்டு கணக்கு வழக்கு காரணமாக வரும் பொ.ஐ .முன்னணியின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற



தேர்தல் அனைத்திலும் வாக்கு கொள்கையில் முன்னணி வகித்த வருமான எஸ்.பி. திஸாநாயக்காவும் இந்த விவஸ்த்தை கெட்ட கும்பலில் அடங்குவர் மறுபுறமாக பௌத்த சிங்கள இனவாதத்தின் ஊற்றுக்கண்ணாகத் திகழும் சிங்கள மகா சம்பத பூமி புத்திரா கட்சியும் இக் கூட்டணியில் இணைந்து கொண்டுள்ளனர்.

ஆக ஐ.தே.கட்சி வலையிலான தேர்தல் கூட்டனியானது வெறும் ஊழல் பேர்வழிகளைமட்டுமன்றி இனங்கள் சக்திகளையும் உள்ளடக்கியதான விவஸ்த்தை கெட்ட கூட்டணி மட்டுமல்ல தேசத்துரோக கூட்டணியுமாகும். அத் தேசத் துரோக கூட்டணியினருக்கு மேற்குலக ஏகாதிபத்தியங்களினதும் அவர்களின் செல்லப்பிள்ளைகளான பிரிவினை வாதிகளினதும் பூரணத்துவமான ஆசீர் வாதத்தை: பெற்றிருப்பது தெளிவான உண்மையாகும்.

ஒரு பக்கத்தில் இந்த அபகீர்த்தியான கூட்டு ஒரு புறமாக இருக்க , மறு புறமாக எம் முன்னால் காணப்படுவது பொ.ஐ. முன்னணியாகும். இன்று பொ.ஐ.முன்னணி தனது 7 வருட கால அநீதி மிக்க மக்கள் துரோக ஆட்சியின் இரையாக மாறியுள்ளது. மக்கள் துரோக ஆட்சிக்கு நிகழக்கூடிய தலைவிதியாக மாறியுள்ளது. தற்போது பொ.ஐ முன்னணிக்கு பேசுவதற்கு மிஞ்சியிருப்பது 7 வருட கால தமது ஆட்சியைப்பற்றியல்ல ஒரு மாதமும் ஐந்து நாட்களாக செயல்ப்பட்ட நன்னடத்தை அரசாங்கம் தொடர்பானதாகும். இதன் தொடர்பாக விளங்கிக் கொள்ளக்கூடிய தொன்றுதான் 7 வருட கால பொ.ஐக்கிய முன்னணி ஆட்சியைவிட ஒருமாதமும் ஐந்து நாட்களாக நடைமுறைப் படுத்தப்பட்ட நன்னடத்தை அரசாங்கம் பெறுமதி மிக்கதென்பதாகும். இதுவே சமூகங்களுக்கு பயனுள்ளதாகும்.

தற்போது பொ.ஐ. முன்னணிக்கு ஏற்பட்ட கதியானது , அதன் மக்கள் விரோத 7 வருட கால ஆட்சியின் பிரதிபலனேயாகும் .அதேவேளை யானை-புலி இனவாதக், தேசத்துரோக கும்பலிடமிருந்து தொடுக்கப்படும் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுப்பதற்குரிய சக்தி கிடையாது. இந்த நிலையில் இந்த படு பயங்கர அச்சுறுத்தலை தோற்கடிப்பதற்கான முழுப் பொறுப்பும் ம.வி முன்னணி மீது சுமத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக தேசத்துரோக யானை-புலி இனவாதக்கூட்டணி தமது முழுப்பலத்தையும் பிரயோகித்து மக்கள் விடுதலை முன்னணி மீதாக தனது தாக்குதலை தொடங்கியுள்ளது. தற்போது ம.வி முன்னணி மீதாக பல் வேறு பொய்களையும் ,சோடிக்கப்பட்ட குற்றச் சாட்டுகளை சொரிவதுடன் அளவுக் கதிகமாகவே அவதூறுகளையும் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

2ம் பக்கம் பார்க்க.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிந்துணர்வு

பொதுசன ஐக்கிய முன்னணியின் சார்பில் அதன் செயலாளர் தி.மு ஜயரத்ன அவர்களை ஒருதரப்பினராகவும், மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் அதன் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா அவர்களை மற்றைய தரப்பினராகவும் கொண்டு இரண்டாயிரத்தோராம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐந்தாம் நாளன்று கொழும்பில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்.கீழ்க்காணும் நிபந்தனைகள் 'மற்றும் உடன்பாடுகளின் பேரில் இருசாராரும் இணக்கப்பாட்டுக்குவருகின்றனர்.

1, சொல்லப்பட்ட ஒப்பந்தத்தின் செல்லுபடியான கால வரையறையானது, 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05 ஆந் திகதி முதல், 2002 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04 ஆந் திகதி வரையான ஓராண்டு காலம் வரை மாத்திரமேயாகும்.

2, (1) இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் உடன்பாடுகளுக்கு புறம்பாக, உடன்பாடுகளுடன் முரண்படுகின்ற அன்றேல் முரண்பட்டு தாக்கம் செலுத்தக்கூடிய கொள்கை சார்ந்ததீர்மானம் ஒன்றை மாற்றும் ✤ அல்லது செயன்முறையொன்றை பாராளுமன்றத்தில் முன்வைக்கக் கருதின்,அவ்வாறு கருதப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மக்கள்விடுதலை முன்னணியின் முன்னங்கீகாரத்தைப பெற்றுக் கொள்வதற்கு இங்கு மற்றைய தரப்பினரான பொதுசனஐக்கிய முன்னணி இத்தால் உடன்படுகின்றது.

(2) இந்த ஒப்பந்தம் செயல்வலுவுறுகின்ற மற்றும் அது உரியவாறு செயற்படுத்தப்படுகின்ற மற்றும் அது உரியவாறு செயற்படுத்தப்படுகின்ற காலப்பிரிவினுள், தற்போதைய பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினை பாராலுமன்றத்தினுள் ஸ்த்திரமற்ற நிலைக்கு உட்படுத்துவதற்கு மற்றும்/அல்லது பதவியிலிருந்து இறக்குவதற்கு நேரடியாக தாக்கம்செலுத்தக்கூடிய எந்தவொரு செயன்முறையையும் மேற்கொள்ளாதிருப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி உடன்படுகின்றது. இக் காலப் பிரிவினுள், பொதுசன ஐக்கிய முன்னணிஅரசாங்கத்தை ஸ்த்திரமாக நடாத்தி செல்வதற்கு அவசியமான ஒத்துழைப்பைப் பாராளுமன்றத்தினுள் வழங்குவதற்கு மக்கள் விடுதலை முன்னணி மேலும் உடன்படுகின்றது.

3, ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்ட, 1192 / 16 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் வண்ணம், 2001 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ம் திகதி நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டதும், 1196/18 ஆம்இலக்க வர்த்தமானப்பத்திரிகையின் மூலம் மீளவும் நீடிக்கப்பட்டு ,2001 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்ததுமாக ,ஒத்திவைக்கப்பட்ட மக்கள் கருத்துக்கணிப்பை, உடனடியாக நடைமுறைக்கு வருமாறு பொதுசன ஐக்கிய முன்னணி இரத்துச் செய்தல் வேண்டும். (இது ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்டுள்ளது).

4, ஏற்கனவே, 1192✤16 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் முலம் ஜனாதிபதியின் ஆணையினால் ஒத்திவைக்கப்பட்டுள்ள. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றமானது, 2001ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பொதுசன ஐக்கிய முன்னணியால் கூட்டப்படல் வேண்டும்.(ஏற்கனவே பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது).

5. இந்த ஒப்பந்தத்தின் இணைப்பில் குறிப்பிடும் எதிர்கட்சியிலுள்ள சகல கட்சிகளினதும் பூரண உடன்பாடடின் கீழ் வரையப்பட்டுள்ள உத்தேச 17 ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின்,

அ) சட்டவாக்கற் சபை

ஆ) சுயாதீன அரசாங்கச்சேவை ஆணைக்குழு

இ) சுயாதீன நீதிச்சேவை ஆணைக்குழு

ஈ) சுயாதீன தேர்தல் ஆணைக்குழு மற்றும்

உ) சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு ஆகியவற்றை இருதரப்பினரும் உடன்பட்டு இன்றியமையாத திருத்தங்களுக்கு உட்படுத்தி, அரசியலமைப்பில் கொண்டுவரப்படும் சீர்திருத்தங்கள் மூலம், 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னைய ஒரு தினத்தில் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் பொதுசன ஐக்கிய முன்னணி உடன்படுகின்றது.சட்டவாக்கற்சபையானது 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னர் நிறுவப்படல் வேண்டும்.

6, சுயாதீன தொடர்பு சாதன ஆணைக்குழுவொன்றை நிறுவுவதற்குத் தேவையான சட்டதிட்டங்களைத் தயார் செய்து, இத்தினத்திலிருந்து 06 மாத காலத்துள் சொல்லப்பட்ட ஆணைக்குழுவை நிறுவுவதற்கு இருதரப்பினரும் உடன்படுகின்றனர்.

7, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்துக்கட்டி, பாராளுமன்றத்துக்கு நிறைவேற்று அதிகாரத்தை வழங்குவதற்காகவும், எல்லா இனப்பிரிவினரதும் விருப்பை பாராளுமன்றத்துள் நியாயமான வகையில் பிரதிநிதித்துவப்படுத்துமாறு தயாரிக்கப்பட்ட தேர்தல் முறையொன்றுக்கு அவசியமான அரசியலமைப்பு சீர் திருத்தங்கள் மற்றும்

இடைக்கால அரசாங்கம் ஒன்றின் கீழ், அந்த தேர்தலை நடாத்துவதற்கு அவசியமானதுமான அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை ,இத் தினத்திலிருந்து 06 மாத காலத்துள் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு இரு தரப்பினரும் உடன்படுகின்றனர். இந்த அரசியலமைப்பு சீர திருத்தத்தினால் ஏற்படுத்தப்படும் முதலாவது பொதுத் தேர்தலின் போது அது செயற்படும்,

8, இந்தப் புரிந்துனர்வு ஒப்பந்தம் செயல் வலுவில் இருக்கும் முழுதும் அளாவிய காலப் பிரிவினுள்,


அ) எரிபொருள், பால்மா, சீனி கோதுமை மா,அரிசி மருந்து வகைகள், மின்சக்தி, எரிவாயு, நீர், பேருந்து மற்றும் புகையிரதக் கட்டணங்கள் முதலிய அத்தியாவசிய நுகர்வுப்பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரிக்காதவாறு கட்டுப்படுத்துவதற்கான

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். வேறு புறம்பான காரணங்களால் சில பண்டங்களின் விலைகள் அதிகரிக்குமாயின், அதில் தலையிட்டு அதனைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய அளவில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஆ) நீர்வளம் ,வங்கி , காப்புறுதி போன்ற அரசாங்க சொத்துக்கள் மற்றும் பொதுச்சொத்துக்களை தனியார்மயப்படுத்துவதற்கான திட்டங்கள் இருப்பின், அவற்றை இந்த ஒப்பந்தம் செயலுறும் ஓராண்டு காலத்துக்கு இடைநிறுத்தி வைப்பதற்கும்,

இ) தற்பொழுதுகைச்சாத்திடப்பட்டு, உடன்பாட்டுக்குவந்துள்ளதும் , அதன் மீது எதிர்காலத்தில் கைச்சாத்திடுவதற்குத் தீர்மானித்துள்துமான நிதி சார் ஒப்பந்தங்கள் தவிர்ந்தவிடத்து , நாட்டுக்கு பாதகமாக அமையக்கூடிய புதிய வர்த்தக மற்றும் நிதி சார் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்படாதிருப்பதற்கும் பொதுசன ஐக்கிய முன்னணி உடன்படுகின்றது.

9, 1994 ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் , அதுவரையில் செலுத்தப்படாதிருந்த ரூ.6000 மில்லியன் கொண்ட விவசாயக்கடன்கள் அறவிடப்படாமல் விடப்பட்டமை போன்று, நெல் மற்றும் வாழைச் செய்கைகளுக்காக 1999-2000 பெரும் போக காலத்திலிருந்த 2001 சிறுபோகம் வரையான காலப்பிரிவில் ரூ.20,000 வரையில் (ரூ.20,000 உட்பட) விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட , விவசாயக்கடன்களை 2001.09.30. ஆம் திகதிக்கு முன்னர் அறவிடப்படாதிருப்பதற்கு பொதுசன ஐக்கிய முன்னணி நடவடிக்கை மேற்கொள்ளும். இந்த வரையறைகளுக்கும், வசதிகளுக்கும் உட்படாத விவசாயக்கடன்கள் தொடப்பிலும் முறையாக ஆராய்ந்து, ஏதும் நிவாரணங்களை வழங்குவதற்குபொதுசன ஐக்கிய முன்னணி நடவடிக்கை மேற்கொள்ளும்.



10, வியாபார நடவடிக்கைகளுக்காக அரசாங்கவங்கிகளிலிருந்து பேரளவிலான கடன் களைப்பெற்று, மீளளிக்காதுள்ளநபர்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக, பூரண அதிகாரம் கொண்ட செயலணியொன்றை நியமித்து, அதன் விதப்புரைகளின் வண்ணம், இந்த ஒப்பந்தத்திலிருந்து மூன்று மாத காலம் முடிவுறும் தினம் அல்லது அதற்கு முன்னர் அக்கடன்களை மீளவும் அறவிட்டுக் கொள்வதற்காக பொதுசன ஐக்கிய முன்னணி உடன்படுகின்றது.

11, உள்நாட்டுதொழில் முயற்சியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் எதிர் கொண்டுள்ள பிரச்சனைகளுக்கான குறுங்கால தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதை இலக்காகக் கொண்டு, பாராளுமன்றத்தை பிரதிநிதிதிதுவப்படுத்தும் சகல கட்சிகளினதும்பிரதிநிதிகளை உள்ளடக்கிய பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிப்பதற்கும், அத்தெரிவுக்குழுவினால் பொதுவான கருத்துக்கள் வினவப்பட்டபின், முன்வைக்கப்படும் விதப்புரைகளைக் கருத்திற்கொண்டு, உள்நாட்டுக் கைத்தொழில்கள் மற்றும் தொழில்முயற்சிகளுக்குப் புத்துயிரூட்டுவதற்காக, இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினத்திலிருந்து 03 மாத காலம் கழிவதற்கு முன்னர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பொதுசன ஐக்கிய முன்னணி உடன்படுகின்றது.

12, எல்லா அமைச்சுக்களுக்கும் உரிய விடயங்களின்படி பொது இணக்கப்பாடொன்றுடன் அந்தந்த விடயங்களுடன் தொடர்பான சிறப்பறிவும், அனுபவமும் கொண்ட அறிஞர்களை உள்ளடக்கிய ஆலோசனைக் குழுக்களை இந்த ஒப்பந்தத்துக்கு வந்து இரண்டு மாதங்கள்கழிவதற்கு முன்னர் நியமிப்பதற்கு இருதரப்பினரும் உடன்படுகின்றனர்.

13, ஜனாதிபதி, அமைச்சரவை, பிரதி அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இந்த ஒப்பந்தம் தொடங்கும் மாதத்திலிருந்து, ஒப்பந்தம் வலுவிலுள்ள முழுதும் அளாவிய காலப்பிரிவினுள் தமது வேதனத்தில் அரைப்பகுதியை அரசாங் திரட்டு நிதியத்திற்கு தன்னிச்சையாக முன்வந்து வரவு வைப்பதற்கும், அந்த அறிக்கைகளை விபரமாக ஒவ்வொரு மாதத்திலும் நிதி அமைச்சினால் இருதரப்பினருக்கும் பெற்றுக் கொடுப்பதற்கும் பொதுசன ஐக்கிய முன்னணி உடன்படுகின்றது.

14, அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களில் தற்போது இடம் பெறுகின்ற வீண் விரயங்களைக் குறைப்பதற்றாக ஒப்பந்தம் செயல் வலுவில் உள்ள காலப்பிரிவினுள்.

அ) ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளவாறு, அரசாங்கத்தின் செலவில் இடம் பெறும் அமைச்சர்களினதும், அதிகாரிகளினதும் வெளிநாட்டுப் பயணங்களை உரிய அளவில் வரையறுப்பதற்கும்.

ஆ) அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கான அதி சொகுசு வாகனங்களைத் தருவிப்பதை நிறுத்துவதற்கும்(அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் தொடர்பில் ஏற்கனவே இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக பொதுசன ஐக்கிய முன்னணி வலியுறுத்திக் கூறுகின்றது),

இ) ஏற்னவே மேற்கொள்ளப்படுகின்றவாறு, அரசாங்கத்தினால் அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுக்காக வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பளவுகளை உரிய அளவில் வரையறுப்பதற்கும்,

ஈ) அமைச்சுக்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களை நடாத்திந் செல்வதற்கு போதுமான வசதிகளுடன் கூடிய இலாபகரமான கட்டிடங்கள் இருக்கின்றவிடத்து, அரசாங்கத்தினால் அதிகளவான குத்தகைக்கு கட்டணங்களைச் செலுத்தி அக்காரியாலயங்களைச் செலுத்தி அக்காரியாலயங்கள்நடாத்தி செல்லப்படுமாயின், அவற்றை குறைந்த செலவுடன் கூடிய உசிதமான வேறு இடங்களில் நிறுவுவதற்கும்,

உ) புதிதாக நிருமானிக்கப்பட்டு வரும் ஜனாதிபதி மாளிகையின் நிர்மானபணிகளுக்காக இந்த ஒப்பந்தம் செயல்வுறும் இவ்வாண்டினுள் நிதி செலவிடாதிருப்பதற்கும்,மேற்கூறிய பணிகள் நிறைவேற்றப்படுகின்றனவா, என்பதை ஆராய்வதற்காகஇருதரப்புப் பிரதிநிதித்துவம் கொண்ட சபையொன்று நியமிப்பதற்கு இருதரப்பினரும் உடன்படுகின்றனர்.

15) ஒப்பந்தம் செயல்வலுவில் உள்ள ஓராண்டு காலப்பிரிவினுள் அமைச்சரவையை 20 பேருக்கு வரையறுப்பதற்கும், அதற்கு சமனானவாறு பிரதி அமைச்சர்களை நியமிப்பதற்கும், அந்த அமைச்சர் பதவிகள் மற்றும் பிரதி அமைச்சர் பதவிகள்அல்லாத "கருத்திட்ட" அல்லது வேறு விதத்தில் அழைக்கப்படும் அமைச்சர் பதவிகளை உருவாக்காதிருப்பதற்கும்,

அமைச்சர் பதவிகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய மேற்குறிப்பிட்டுள்ள மாற்றங்களை இந்த ஒப்பந்தத்திலிருந்து ஒரு வார காலத்துள், அதாவது 2001 செப்ரம்பர் 12 அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்வதற்கு பொதுசன ஐக்கிய முன்னணி உடன்படுகின்றது.

16, போர்த்தளபாடங்கள், வானூர்திகள், உள்ளிட்ட அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கொள்வனவுகளின் போது இடம் பெறும், ஊழல்கள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக பூரண அதிகாரம் கொண்ட சபையொன்று இந்த ஒப்பந்தத்திலிருந்து ஒரு மாத காலம் கழிவதற்கு முன்னர் நியமித்து செயற்படுத்துவதற்கு பொதுசன ஐக்கிய முன்னணி உடன்படுகின்றது.

17, சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் ஆக்கப்பட்ட சட்ட வாக்கங்கள், ஏற்கனவே இலங்கையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, கைச்சாத்திடப்பட்டுள்ளபோதிலும் இலங்கையினுள் சட்ட அமுலாக்கம் பெறாத சட்டவாக்கங்கள் தொடர்பாக ஆராய்ந்து, சட்ட வரைவுகளைத் தயாரிப்பதற்கான விதப்புரைகளை முன்வைப்பதற்கும், ஏற்கனவே இலங்கையில் சட்ட அமுலாக்கம் பெற்றுள்ளவிடத்தும், உரிய விதத்தில் செயல்வலுப் பெறாத தொழிலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ர்வு ஒப்பந்தம்



சட்டங்கள் செயற்படாதிருப்பதன் மீது தாக்கம் செலுத்தியுள்ள விடயங்கள் குறித்து ஆராய்ந்து, அது தொடர்பான விதப்புரைகளை முன்வைப்பதற்கும், முக்கிய தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமிப்பதற்கும், அந்த விதப்புரைகளின் பேரில் உரிய சட்டங்களை ஆக்குவதற்கும், அவற்றை இந்த ஒப்பந்தம் செயல்வலுவுறும் ஆண்டினுள் சட்டவாங்களிற்கு உட்படுத்துவதற்கும் பொதுசன ஐக்கிய முன்னணி உடன்படுகின்றது.

18) அரசாங்கத்தினால் தொழில் வாய்ப்புகளுக்காக மேற்கொள்ளப்படும் சகல நியமனங்களின் போதும் பதவி உயர்வுகளின் போதும், இடமாற்றங்களின் போதும் இனம்,மதம்,பால், கட்சி அரசியல் ஆகிய பேதங்களின்றி தெளிவான கொள்கையொன்றின் கீழ், இந்த ஒப்பந்தம் செயல்வலுவில் உள்ள காலப்பிரிவினுள் அவற்றை மேற்கொள்வதற்கு பொதுசன ஐக்கிய முன்னணி உடன்படுகின்றது.

19, ஆட்கள் மற்றும் பாதாக உலகக் கோஷ்டிகளிடம் உள்ள சட்ட விரோத ஆயுதங்கள் அனைத்தையும் கைப்பற்றுவதற்காகவும், குற்றத் தடுப்புக்கா- கவும் தாமதமின்றி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு பொதுசன ஐக்கிய முன்னணி உடன்படுகின்றது.

20, தேசியப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காக, தேசத்தின் சகல பிரிவினரதும் பங்களிப்புடன்கூடிய பரந்தளவிலான இணக்கப்பாடொன்றுக்கு வரும் வரை, இந்த ஒப்பந்தம் செயல்லுறும் இவ்வாண்டினுள் அதிகாரப் பரவலாக்கத்துக்கான பிரேரணைகள் அல்லது விவாதத்திற்கு உருவான வேறு பிரேரணைகளை பாராளுமன்றத்தின் முன் வைக்காதிருப்பதற்குபொதுசன ஐக்கிய முன்னணி உடன்படுகின்றது.

21, நாட்டில் நிலவும் யுத்தத்தின் காரணமாக அநாதரவாக்கப்பட்டு, இன்னலில் வாழும் சகல சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் வாழ்வு நிலையை மேம்படுத்தும் பொருட்டும், அவர்களின் சமூக வாழ்க்கைநிலையை மீள கட்டிஎழுப்புவதற்காகவும் இடையீட்டாளராகச் செயற்படக்கூடிய பூரண அதிகாரம் கொண்ட செயலணியொன்றை நியமிப்பதற்கும், அந்த மக்களுக்குத் தற்போது வழங்கப்படும் நிவாரண உதவிகளை அத்கரிப்பதற்கும் பொதுசன ஐக்கிய முன்னணி உடன்படுகின்றது. இந்தஒப்பந்தம் செயல்வலுவில் உள்ள காலப் பிரிவினுள்,

அ) கல்வியை தனியார் மயப்படுத்துவதற்கெனத் தயாரிக்கப்பட்ட சகல திட்டங்களையும் இடைநிறுத்தி வைப்பதற்கும்(இவ்வாறான தீர்மானங்கள் இல்லை என பொதுசன ஐக்கிய முன்னணி வலியுறுத்திக் கூறுகின்றது),தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு அனுமதி வழங்காதிருப்பதற்கும் (தற்பொழுதும் ஏற்றுஅங்கிகரிக்கப்பட்ட கொள்கை இதுவென பொதுசன ஐக்கிய முன்னணி வலியுறுத்திக் கூறுகின்றது). தேசிய பல்கலைக்கழக தொகுதியமைப்பை விரிவாக்குவதற்கும், பண்புத்தரம் சார் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான விதப்புரைகளை முன்வைப்பதற்கும் பல்கலைக்கழகவிரிவுரையாளர்கள் உள்ளிட்ட அறிஞர்களை உள்ளடக்கியசபையொன்றை நியமிப்பதற்கு பொதுசன ஐக்கிய முன்னணி உடன்படுகின்றது.

23, இந்த ஒப்பந்தத்தின் ஓராண்டு நிறைவின் பின்னர், பாராளுமன்றத்தை கலைத்து இந்த ஒப்பந்தத்தின் வண்ணம் உருவாக்கப்படும் புதிய தேர்தல் முறையினதும் இடைக்கால அரசாங்கத்தினதும் கீழ், சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கு பொதுசன ஐக்கிய முன்னணி உடன்படுகின்றது.

24, கீழ்க்காணும் செயன்முறைகளுக்காக மக்கள் விடுதலை முன்னணி மேலும் தனது உடன்பாட்டை தெரிவிக்கின்றது.

1. இந்த ஓராண்டு காலப்பிரிவினுள் உறுதியான அரசாங்கம் ஒன்றைநடாத்தி செல்வதற்காக,பொதுசன ஐக்கிய முன்னணிக்குப் பாராளுமன்றத்தினுள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவசியமான ஒத்துழைப்பை வழங்குவதற்கு மக்கள் விடுதலை முன்னணி உடன்படுகின்றது.

2. நாட்டில் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு அவசியமான அரசியல் ஸ்த்திரத் தன்மையை உருவாக்குவதில் தம் பங்ளிப்பைச் செலுத்துவதற்கு மக்கள் விடுதலை முன்னணி உடன்படுகின்றது.

3. அரசாங்கம் மற்றும் பொருளாதாரத்தை சீர் குலைக்கக் கூடிய வேறுசாராரினால் மேற்கொள்ளப்படும் நாசகார செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்காதிருப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி உடன்படுகின்றது. (ஏற்கனவே இந்த நிலைப்பாட்டுக்கு இணங்கச் செயற்படுவதாக மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்திக்கூறுகின்றது).

25, மேற் போந்த உடன்பாடுகளுக்கு வந்த விடயங்கள், தனித்தனியாகவும்,கூட்டாகவும் அவற்றுக்கு உரித்தான கால கட்டங்களினுள் கட்டாயமாக நிறைவேற்றப் படவேண்டியவை யென்பதில் இருதரப்பினரும் உடன்படுவதுடன், ஏதுமொரு விதத்தில்அந்த குறித்துரைக் கப்பட்ட காலகட்டத்தினுள் ஏதேனுமொரு காரணத்தினால்அல்லது காரணங்கள் சிலவற்றினால் நிறைவேற்றாதிருப்பதற்கு ஏதுமொருதரப்பினர் நடவடிக்கை மேற்கொள்வார் களாயின், மற்றைய தரப்பினருக்கு முன்கூட்டியே எழுத்திலான அறிவித்தலொன்றை விடுத்தபின், அது தொடர்பாகக் கலந்துரையாடி அதன் மூலமும் உடன்பாட்டுக்கு வரமுடியாதிருப்பின், இந்த ஒப்பந்தத்திலிருந்து நீங்குவதற்கு தரப்பினர்களுக்கு உரிமை உள்ளதென்பதில் இருசாராரும் மேலும் இத் தால் உடன்படுகின்றனர்.

26, மேற் போந்த சகல உடன்பாடுகளையும் நிறைவேற்றுவதை கண்காணிப்பதற்காக மதத் தலைவர்களையும், தொழிற்சங்க பிரதி நிதிகளையும், வர்த்தக சமூக பிரதி நிதிகளையும் தொழிற் துறையினரையும், கலைஞர்கள் மற்றும் தொடர்பு சாதன பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய கண்காணிப்புச் சபையொன்றை நியமித்துக் கொள்ளவும் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்வவற்கான முறைமையொன்றைத் தயாரித்துக் கொள்ளவும் இருதரப்பினரும் உடன்படுகின்றனர்.

27, இவ் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பந்தியொன்றில் அல்லது பதம் ஒன்றின் பொருள் கோடல் தொடர்பில் சிக்கல் எழுமாயின், உரிய பந்தியை அல்லது பதத்தை விளக்கி வைப்பதற்காக இருதரப்பினரும் கலந்துரையாட வேண்டும் என்பதுடன், இருதரப்பினரும் உடன்பாட்டுடன் இருதரப்பினரும் இறுதித்தீர்மானத்துக்கு வர வேண்டும் என இரு சாராரும் உடன்படுகின்றனர்.

28, இருதரப்பினரதும் உடன்பாட்டின் வண்ணம், தேவைப்படின், இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் எந்தவொரு பந்தியையோ அல்லது பந்திகளையோ நீக்குதல், திருத்தியமைத்தல் அல்லது புதிதாக பந்திகளை உள்ளடக்குதல் மேற்கொள்ளப்படலாம் என்பதில் இருசாராரும் உடன்படுகின்றனர்.

2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05 ஆந் திகதி கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

தி.மு.ஜயரத்ன — செயலாளர்/பொதுசன ஐக்கிய முன்னணி

ரில்வின் சில்வா — செயலாளர்/மக்கள்விடுதலை முன்னணி

# புரிந்துணர்வு உடன்படிக்கை என்ன சொல்கிறது?

பொது.ஜ.ஐக்கிய முன்னணி மக்கள் விடுதலை முன்னணி ஆகிய இரு கட்சிகளுக்கும் இடையில் நன்நடத்தை அரசாங்கம் தொடர்பாக கைச்சாத்தான புரிந்துணர்வு உடன்படிக்கை சம்பந்தமாக தமிழ்கட்சிகள், தமிழ்மக்கள் மத்தியிலான உத்தியோகபூர்வ புத்தி ஜீவிகள் மற்றும் பிழைப்புவாத ஊடகத்துறை சார்ந்தோர் என பல தரப்பினராலும் பலத்த கண்டணங்கள் வெளிக்கிளம்பியிருந்தது. ஒருசாரார் புரிந்துணர்வு உடன்படிக்கை தேசியபிரச்சனைக்கு தீர்வெதனையும் முன்வைக்க தவறியுள்ளது என குற்றஞ் சுமத்தியுள்ளனர்மற்றொருசாரார் புரிந்துணர்வு உடன்படிக்கையின் 20வது சரத்து தேசியபிரச்சனைக்கான தீர்வு முயற்சிகளை ஒருவருட காலத்துக்கு பின்தள்ளிவிட்டதென குற்றம் சுமத்துகின்றனர். ஆக இவ்விரு சாராரினதும் ஒட்டு மொத்தமானகருத்து, இந் நாட்டின் தறிகெட்ட அரசியல் வாதிகளால் கடந்த 53 வருட காலமாக இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் ஊடாக வளர்த்தெடுக்கப்பட்ட தேசியப்பிரச்சினையை, ஒருவருட காலத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை ஊடாக தீர்வொன்றை காணமுற்படவில்லை என்பதாகும்.

பொ.ஜ.ஐக்கிய முன்னணியும் மக்கள் விடுதலை முன்னணியும் செய்து கொண்ட நன்நடத்தை அரசாங்கம் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையானது, இந் நாட்டின் தமிழ், முஸ்லிம,சிங்கள மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகளுக்கான ஒட்டு மொத்த தீர்வல்ல என்பது இந்தி பேரறிவாளர்களால் புரிந்து கொள்ள முடியாமை போனது ஆச்சரியமானதொன்றல்ல ,ஏனெனில் இவர்கள் எப்போதுமே மக்கள் பக்கமாக சிந்திப்பதில்லை. ம.வி முன்னணியினரால் முன்வைக்கப்பட்ட நன்நடத்தை அரசாங்க யோசனைகள் இந் நாட்டின் தமிழ்,முஸ்லிம்,சிங்கள மக்கள் முகம் கொடுக்கும் சில முக்கியமான அடிப்படைபிரச்சனைகளின் தீர்வுக்கான ஆரம்பபடிமுறை மட்டுமேயாகும் இதன் அடிப்படையில் தேசியப்பிரச்சனையின் தோற்றத்திக்கான மூலகாரணங்களில் முக்கியமான ஒன்றுக்கான தீர்வு,

சரத்தினூடாக வலியுறுத்தப்பட்டுள்ளது. அதாவது அனைத்து நியமனங்கள், பதவி உயர்வுகள் இடமாற்றங்கள் போன்ற விவகாரங்களால் இன,மத,மொழி பால், வேறுபாடுகளை கைவிட்டு தகுதி திறமை அடிப்படையில் செயற்படவேண்டும் என்பதாகும் இது தேசியப்பிரச்சனையின் நீண்டகால இருப்புக்கு பிரதான காரணிகளில் ஒன்றுக்கான தீர்வாகும்.

இது தவிர சரத்தின் மூலம் சிங்கள,தமிழ்,முஸ்லிம் விவசாயிகள் எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்கு உடனடித் தீர்வாக அவர்களால் மீளச் செலுத்த முடியாது திணறும் விவசாயக் கடனை இரத்துச் செய்து கூறப்பட்டதுபோல் சரத்தினூடாக வடக்கு,கிழக்கு யுத்தக் கொடுமையால், சொந்தபந்தங்கள், வீடுவாசல்கள், சொத்து சுகங்கள் அனைத்தையும் இரையாக்கி நாதியற்ற நிலைக்குள்ளாக்கப்பட்ட ,தமிழ்,முஸ்லிம்,சிங்கள மக்கள் போக்கிடமின்றி, அகதி முகாம்களில் சரணடைந்து பண்பாட்டு சீரழிவுக்குள் உட்பட்டிருக்கும் நிலமைகள் வார்த்தைகளால் கூறமுடியாதாகும் இங்குள்ள சிறுவர்கள் தமது ஆரம்பக்கல்வியை கூட பெற்றுக்கொள்ள முடியாது அனாதைகளாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கொடுமை எவ்வகையிலும் அனுமதிக்கப்பட முடியாததொன்றாகும். எனவே இந்த மக்களின் துர்ப்பாக்கியமான வாழ்க்கை முறைமையை மாறியமைக்க ஏற்புடையதாக, அம்மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளைஇனங்கண்டு அவற்றை தீர்த்து வைக்கும் விதமாக மானியங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் காணப்படும் அம்சமாகும்.

20 வது சரத்து விவகாரத்தை எடுத்துக்கொண்டால் தேசியப்பிரச்சனை தொடர்பாக அந்நியதலையீடுகள் அல்லாத எந்த பேச்சுவார்த்தைகளையும் அது தடுக்கவில்லை. அதே வேளை தற்போது நடைமுறையிலுள்ள சீர் கெட்ட அரசியல் தலைமைத்துவங்கள், மற்றும்ஆயுத அச்சுறுத்தல்களால் அம் மக்கள் ஒடுக்கப்பட்ட நிலைக்குள் இருத்திக்கொண்ட வெற்றுத்தனமானதும் அரசியல் வசதி வாய்ப்புக்களை பெருக்கிக்கொள்ளக்கூடியதான பதவிகளை உள்ளடக்கியதான அதிகாரப்பகிர்வு போன்ற சர்ச்சைக்குரிய தீர்வுகளையே 20வதுசரத்து தடுக்கிறது. சர்ச்சைக்குரியது என்னும் குறியீடானது தமிழ்,முஸ்லிம்களின்உரிமைகளை மறுதலிப்பதான அர்த்தமில்லை. .கடந்த வருடம் பொ.ஜ.ஐக்கிய முன்னணிஅரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த தீர்வு திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களில் மிகப்பாரதூரமானதும், வடக்கு,கிழக்கு தமிழ்,முஸ்லிம் மக்களின்அடிப்படை ஜனநாயக உரிமைகளைமறுதலிக்கும் விதமானஜனாதிபதியினால் நியமிக்கப்படும் 10 வருட காலத்துக்கான இடைக்கால நிர்வாகம் என்ற போர்வையில் அம் மக்களை அரசியல் வாதிகளின்அடிமைப்பொறிக்குள் வீழ்த்தும், சர்ச்சைக்குரிய சட்ட திட்டங்களை பாராளுமன்றதில் சமர்ப்பிப்பதானது பிரச்சனைகளை மேலும் மேலும் சிக்களுக்குள் தள்ளிவிடும் என்ற காரணியின் அடிப்படையிலேயே 20வதுசரத்து சேர்க்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட விதமான இந்நாட்டின் தமிழ்,முஸ்லிம்,சிங்கள மக்கள் பிரிவினர் எதிர் கொள்ளும் அடிப்படைப்பிரச்சனைகள் சிலவற்றை தீர்த்துவைக்கும் ஆரம்பங்களே புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஊடாக மக்கள் விடுதலை முன்னணி சாதித்திருக்கிறது ஐ.தேசியக்கட்சி தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டனியினர் அரசாங்கத்தை பாதுகாக்க முன்வைத்த வேலைத்திட்டமான தேசிய அரசு அல்லது சர்வ கட்சி அரசு போன்றவை ஊடாக அமைச்சர் பதவிகள் மற்றும் முக்கியஸ்தர்களுக்கான உயர் பதவிகள் அதிகாரத்தில் பங்கு போன்ற அரசியல் வாதிகளின் சுய தேவைகளுக்கான யோசனைகள் மக்கள் விடுதலை முன்னணியினால் முன்வைக்கப்படவில்லை . இந்த உண்மையைக்கூட தமிழ் மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் பேரறிவாளர்களால் உணரமுடியாமல் போனதேன்? இவர்கள் எந்த மக்களின் தேவைகளை முன்வைத்து விஷமத்தன விதத்தில் அர்த்தமற்ற குற்றச்சாட்டுக்களையும் இனவாதச் சேற்றையும் மக்கள் விடுதலை முன்னணி மீது வாரியிறைக்கிறார்கள் என்பதை வினாவ வேண்டியவர்கள் இந் நாட்டின் தமிழ்,முஸ்லிம்,சிங்கள மக்களேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மால் முடிந்த சரியானதை செய்து, நாட்டை அராஜகத்திலிருந்து மீட்டெடுத்தோம்!

ம.வி.மு. பொதுச் செயலாளர் தோழர் ரில்வின் சில்வா

செஞ்சக்தி : - இந்த வேளையில் மக்கள் விடுதலை முன்னணியினால் நாட்டினுள் முன்வைக்கப் பட்டிருக்கும். நன்நடத்தை அரசாங்கத்திட்டத்தை பொதுசன ஐக்கிய முன்னணி கொள்கை அடிப்படையில் ஏற்றுக்கொண்டு மக்கள் விடுதலை முன்னணியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொண்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணிக்கும் பொ.ஐ.முன்னணிக்கும் இடையே இவ்வாறானதொரு உடன்படிக்கை ஏற்பட வழிவகுத்த காரணங்கள் என்ன?

தோழர் டி . சில்வா : - ம.வி.முன்னணிக்கும் பொ.ஐ.முன்னணிக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொள்ள பிரதான காரணமாக அமைந்தது கடந்த காலத்தினுள் நாட்டினுள் ஏற்பட்ட அரசியல் அராஜக நிலையும் அரசியல் ஸ்திரமின்மையுமாகும். பொ .ஐ.முன்னணி தனது அதிகார பலத்தைப் பயன்படுத்தி ஊழல் மோசடியூடாக நடாத்தப்பட்ட 2000 பொதுத்தேர்தலில் பொதுசன முன்னணிக்கு பாராளுமன்றத்திலும் தேவையான அறுதிப்பெரும்பாண்மை கிடைக்கவில்லை அதேபோல் ஐ.தே.கட்சிக்கும் அறுதிப்பெரும்பாண்மை கிடைக்கவில்லை. எனினும் பொதுசன முன்னணி , முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து அரசாங்கத்தை அமைத்துக்கொண்டது. ஆனால் கடந்த யூலைமாதத்தில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களில் பலர் அரசிலிருந்து வெளியேறியதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தினுள் பொதுசன முன்னணி சிறுபாண்மையினராக மாற்றம் பெற்றனர் ஐ.தே.கட்சி அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை பாராளுமன்றத்தில் முன்வைத்தது இந்த சந்தர்ப்பத்திலாகும். பொதுத் தேர்தலில் மக்களின் விருப்பத்தினூடாக ஆட்சியை கைப்பற்றுவதென்பது சாத்தியமாகாது என்பதை தெரிந்து கொண்ட ஐ.தே.கட்சியினரின் தந்திரோபாயமாகும்.. பாராளுமன்றத்தினுள் பொதுசன ஐக்கிய முன்னணியை தோற்கடித்து பல்வேறு குழுக்களின் ஆதரவுடன் பாராளுமன்றத்தினுள் ஐ.தே.கட்சி ஆட்சியை அமைப்பதென்பதே அவர்களது திட்டம் இந்நிலையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு முகங்கொடுக்க முடியாததனால் ஜனாதிபதி பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைத்தார். அத்துடன் சர்வசன வாக்கெடுப்பொன்றிற்கான அறிவித்தலை வெளியிட்டார். இதனால் நாட்டினுள் பல்வேறு நெருக்கடிகள் தோன்றின. ஒருபக்கத்தில் நாட்டின் அரசியல் ஸ்திரமின்மையும் அராஜகமும் தோன்றியது. இதனால் பலனடைவது பிரிவினை வாதிகளும் ஏகாதிபத்தியவாதிகளும் தான். மறுபக்கத்தில் அரசாங்கம் ஜனநாயக விரோத பாதையில் செல்லும் நிலை ஏற்பட்டது. இதுவும் நாட்டிற்கு சிறந்ததல்ல என்பது தெளிவான உண்மை இதற்கிடையில் ஐக்கியதேசியக் கட்சிக்கு பின்னால் நின்று செயற்பட்ட பிரிவினைவாதிகள் , ஏகாதிபத்தியவாதிகள் பாராளுமன்றத்தினுள் மக்கள் விருப்பத்திற்கு மாறாக ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டது. இதனூடாக தோன்றிய அனைத்து நிலமையும் நாட்டுக்கும் மக்களுக்கும் பாரிய சேதங்களை உண்டுபண்ணக்கூடிய நிகழ்வுகளாக காணப்பட்டன. இந்தச்சந்தர்ப்பத்தில் தான் ம.வி.முன்னணி நாட்டிற்கும் , எதிர்க்கட்சிக்கும் , அரசாங்கத்திற்கும் பொதுவேலைத் திட்டத்தை சமர்பித்து ஜனநாயகம் அழிந்து இல்லாமல் போகும் , நாடு அராஜக நிலைக்குள்ளாகும் இந்தப்பயங்கர நிலையிலிருந்து மீண்டெழ எம்மால் செய்யக்கூடிய சிறந்ததொரு பங்களிப்பு அராஜக நிலை , ஸ்திரமின்மையை நீக்கி செயலற்று இருக்கும் அராஜகத்தை முதலாளித்துவ ஜனநாயக வேலைத்திட்டத்தின் கீழ் கொண்டுவந்து பின்னர் சுதந்திரமான நீதியான தேர்தலை நோக்கி நாட்டை கொண்டுசென்றுதமக்கு விருப்பமான அரசாங்கத்தை தேர்ந்தெடுத்துக்கொள்ள மக்களுக்கு சந்தர்ப்பத்தை அளிப்பதற்காகவேயாகும். நாம் எமது வேலைத்திட்டத்தை முன்வைத்தது இந்த நோக்கத்திற்காகத்தான்.

செஞ்சக்தி : - இந்தப்புரிந்துணர்வு உடன்படிக்கையினால் இன்றுவரை மக்களுக்கு கிடைத்திருக்கின்ற வெற்றி என்ன?

தோழர் டி . சில்வா : - நாட்டில் அரசியல் அராஜகமும் ஸ்திரமின்மையும் நீங்கி நாடு முகங்கொடுக்க இருந்த பாரிய அழிவிலிருந்து நாட்டை பாதுகாத்தமை முதல்வெற்றியாகும். போலிசர்வசன வாக்கெடுப்பை இரத்துச்செய்து பாராளுமன்றக் (கூட்டத்தொடரை) 7 ம் திகதிக்கு முன்னர் கூட்டியதும் யார் எதைக்கூறினாலும் ஒரு பெரிய வெற்றியேயாகும். அமைச்சரவையை 20 ஆக குறைத்தது மற்றொரு வெற்றியாகும். இந்த வேலைத்திட்டத்தினால் எமது நாட்டில் ஒருவருட காலத்திற்காவது பிரிவினைவாதிகளின் திட்டம் பின்னடைந்துள்ளது. ஏகாதிபத்திய வாதிகளின் தேவையும் ஒருவருடத்திற்காவது இடைநிறுத்தி வைத்தமை மாபெரும் வெற்றியாகும். நாம் நினைக்கின்றோம் பிரிவினைவாத திட்டங்களை தற்காலிகமாகவேனும் இடைநிறுத்த முடிந்ததும் , தனியார்மயப்படுத்தலை ஒருவருடத்திற்காவது இடைநிறுத்தி ஏகாதிபத்தியவாதிகளின் செயற்திட்டத்தை குறைந்தபட்சமாவது தடுத்து நிறுத்த முடிந்தது மக்கள் பெற்ற வெற்றியாகும்.

> ”
> பொதுசன முன்னணி அரசின் நிகழ்ச்சிநிரல் போன்றே ஐ.தே.கட்சியின் நகழ்சிநிரலிலும் முதலிடம்பெறுவது சமாதானப்பேச்சுவார்த்தை , அதிகாரப்பிரிப்புமாகும் என்பது உண்மையாகும் எனினும் நாம் கையெழுத்திட்ட உடன்படிக்கையில் □சமாதானப் பேச்சுவார்த்தை□ அடங்கவில்லை தேசியப்பிரச்சனைபோன்ற பாரிய பிரச்சனைகளை இந்தக்குறுங்கால அரசாங்கத்தினால் தீர்க்கமுடியாது. அது வேறாக கலந்துரையாடப்படவேண்டிய பிரச்சினையாகும்.
> ”

செஞ்சக்தி : - நன்னடத்தை என்ற வசனம் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையினுள் இல்லை. அதேபோல் பொ.ஐ.முன்னணியில் பலர் கூறுகின்றார்கள் நாங்கள் மக்கள் விடுதலை முன்னணியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு இணங்கினோம் (இணைந்தோம்) அன்றி நன்நடத்தை வேலைத்திட்டத்திற்கல்ல என்கின்றனர். இதைப்பற்றி செஞ்சக்திக்கு சிறு விளக்கம் அளித்தால்.

தோழர் டி . சில்வா : - உண்மைதான் ஜூநன்நடத்தைஜி என்ற வசனம் இந்த உடன்படிக்கையில் இல்லை இதனால் " நன்நடத்தை அரசாங்கமும்" இல்லை இருப்பது பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தான் அதுபொதுசன முன்னணி அரசாங்கமன்றி பொ.ஐ.மு - ம . வி .முன்னணி அரசாங்கமல்ல. எனினும் இந்த அரசாங்கத்திற்கும் எமக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட இந்த உடன்படிக்கையினூடாக ஒரு வருடகாலத்திற்கு இந்த அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களை நாம் முன்வைத்த யோசனைகளுக்கு அடிமைப்படுத்திருக்கிறோம் அரசாங்கம் கட்டாயமாக செய்யவேண்டியவையும் , செய்யக்கூடாதவையும் இதில் கட்டாயமாக அடங்கியிருக்கின்றன. இவற்றை நன்நடத்தைக் காலம் என்ற பொருளாக எடுத்துக்கொள்ளலாம் அதன் அர்த்தம் (பொருள்) இக்காலப்பகுதியினுள் அரசாங்கமானது ம.வி.முன்னணியுடன் இணங்கிய உடன்படிக்கையின்படி எங்களினதும் , நாட்டு மக்களினதும் , கண்காணிப்பின் கீழே செயற்படுத்துவதாகும். எவ்வாறெனினும் எங்களுக்கு முக்கியமானது அரசாங்கத்தின் பெயரல்ல. அரசாங்கம் செய்வதும் , செய்யாதிருப்பதும் எவை என்பதாகும்.



செஞ்சக்தி : - இந்தப்புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலில் இருக்கும் காலப்பகுதியினுள் அரசாங்கச் சொத்து , சமூக மூலவளங்கள் , இயற்கைவளங்கள் ஆகியவை தனியார் மயப்படுத்துவதை நிறுத்திவைக்க பொதுசன ஐக்கிய முன்னணி இணங்கியுள்ளது. ஆனால் தனியர் மயப்படுத்தலை இடைநிறுத்தி இல்லையென்று பொதுசன முன்னணி அரசாங்கத்தினால் தெரிவிக்கப்படுகின்ற கருத்துக்களை பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

தோழர் டி. சில்வா : - இந்த உடன்படிக்கையின்படி பொதுசன ஐக்கிய முன்னணி தமது கொள்கைகளை மாற்றிக்கொள்வதில்லை. நாம் அவ்வாறு கேட்கவும் இல்லை. நாம் எமது கொள்கைகளை விட்டுக்கொடுக்கவும் இல்லை அதனடிப்படையில் பொதுசன ஐக்கிய முன்னணி பொருளாதார அபிவிருத்தியின் பிரதான மார்க்கமாக நம்புகின்ற தனியார் மயப்படுத்தலை முன்வைக்கும் (வரும் காலங்களிலும்) அவர்களின் கொள்கைகளாக கூறுவர். எனினும் இந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒருவருடத்திற்கு அவர்களுக்கு நாட்டின் எந்த நிறுவனத்தையும் தனியார் மயப்படுத்த முடியாது. உடன்படிக்கையின் 8 வது பிரிவின் "ஆ" உபபிரிவிற்கமைய அவர்கள் இவ்வருடத்தினுள் அரசாங்கச் சொத்து , மற்றும் சமூகச்சொத்து, இயற்கை வளங்களை தனியார் மயப்படுத்துவதனை இடைநிறுத்தி வைப்பதற்கு இணங்கியுள்ளனர். யார் எதைக்கூறினாலும் அரசாங்கம் கட்டாயமாக இந்த உடன்படிக்கையின் படி செயற்படவேண்டும். எனினும் அவர்களின் விருப்பங்கள் , கொள்கைகளை வேறாக கூறுவார்கள். அதில் எங்களுக்கு எவ்வித பிரச்சனையுமில்லை.

செஞ்சக்தி : - **L.T.T.E** யுடன் சமாதானத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது தமது முதல்வேளை என பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தெரிவிக்கின்றது. இது சம்பந்தமாக ம.வி.முன்னணியின் நிலைப்பாடு என்ன?

தோழர் டி.சில்வா : - பொதுசன முன்னணி அரசின் நிகழ்ச்சிநிரல் போன்றே ஐ.தே.கட்சியின் நகழ்சிநிரலிலும் முதலிடம்பெறுவது சமாதானப்பேச்சுவார்த்தை , அதிகாரப்பிரிப்புமாகும் என்பது உண்மையாகும் எனினும் நாம் கையெழுத்திட்ட உடன்படிக்கையில் "சமாதானப் பேச்சுவார்த்தை" அடங்கவில்லை தேசியப்பிரச்சனைபோன்ற பாரிய பிரச்சனைகளை இந்தக்குறுங்கால

7ம் பக்கம் பார்க்க.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பணம் மக்களுக்கே!

## மூதூர் வைத்தியசாலைக்கு மக்கள் விடுதலை முன்னணி அம்புலன்ஸ் படகு அன்பளிப்பு!

### 2 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் பயன்பெறுவர்

மக்கள் விடுதலை முன்னணி சார்பான பல்வேறு மக்கள் பிரதேசசபை, மாகாணசபை, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த ஊதியத்தை மையமாகக்கொண்டு செயற்படுத்தப்படும் பொதுநிதியில் இருந்து திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச வைத்திய சாலைக்கு 6 லட்சம் ரூபா செலவில் நிர்மானிக்கப்பட்ட அம்புலன்ஸ் படகு எதிர்வரும் 27 .10 .2001 ம் நாள் அன்பளிப்பு செய்யப்பட விருக்கின்றது.

திருகோணமலை மாவட்டத்துள் அடங்கும் மூதூர் பிரதேசம் அபிவிருத்தியில் பின்தங்கிய ஓர் பிரதேசம் மட்டுமல்லாது அரசியல் வாதிகளால் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாத துமான விவசாயத்தை பிரதான தொழிலாகக்கொண்ட இப்பிரதேசம் கடந்த பல வருடங்களாக யுத்தக் கொடுந்தீயில் கருகிவரும் ஓர் பகுதியாகும் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொள்ளும் இப் பிரதேசமானது கல்லாறு, கம்பூர், கிளிவெட்டி, தோப்பூர், வெருகல், கங்குவேலி, மூன்றாம் கொலனி, 58 ம் கொலனி, சோமபுரம், தெஹிவத்தை, பெரிய பாலம், மூதூர், ஆகிய சிற்றூர்களை உள்ளடக்கியதான பகுதியாகும். இங்குள்ள வைத்தியசாலை அவசர சிகிச்சைகளுக்கு ஏற்புடையதாக அபிவிருத்திசெய்யப்படாததொன்றாகும் அனேகமான அவசர சிகிச்சைக்கான நோயாளிகள் மூதூர் வைத்திய சாலையில் இருந்து திருகோணமலை தள வைத்தியசாலைக்கும், சேருவில வைத்தியசாலைக்குமே அனுப்பி வைக்கப்படுகின்றனர். சேருவில வைத்திய சாலைமூலம் பயன்பெறுவோர் கிட்டத்தட்ட 50,000 வரையென கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. ஏனைய 15,000 பேரும் திருகோணமலை தள வைத்திய சாலையையே நம்பியிருக்க வேண்டியவர்களாகின்றார்கள்

தற்போதைய யுத்த நிலமைகளின் மத்தியில் எதிர்பாராத விபத்துக் குள்ளாபவர்கள் மற்றும் கடுமையான அவசர சிகிச்சைக்குரிய நோயாளர்களை தரைவழிப்பாதையாக திருகோணமலை தள வைத்திய சாலைக்கு தரைவழிப்பாதையால் அனுப்பிவைக்க நான்கு மணித்தியாலங்கள் தேவைப்படுகின்றது. சீரற்ற பாதைகளில் நீண்டதூரம் பயணம் செய்யும் காரணத்தால் பல நோயாளருக்கு உரிய நேரத்தில் சிகிச்சைபெற்றுக்கொள்ள முடியாமல் போவதனால் பலர் உயிர் இழப்பதாக தெரியவருகின்றது. இந்த மோசமான நிலமைபற்றி திருகோணமலை அரசியல் வாதிகளோ அல்லது பெருமளவாக இயங்கும் தொண்டர் நிறுவனங்களோ அக்கறை கொள்ளாத நிலமையே காணப்பட்டது. கடந்த 6 மாதங்களுக்கு முன்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் திருகோணமலை மாவட்ட மக்கள் சேவை குழுவினர் கட்சி தலைவர்களுடன் கலந்துரையாடியதன் பயனாகவே மேற்படி அன்புலன்ஸ் படகு அன்பளிப்புத்திட்டம் தீர்மானிக்கப்பட்டது.

அன்புலன்ஸ் படகு சேவையில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்பதாக மூதூர் வைத்தியசாலையில் இருந்து 30 நிமிட நேரத்தில் திருகோணமலை தள வைத்திய சாலையை சென்று அடைய முடியும். இதன்காரணமாக எதிர்காலத்தில் மூதூர் வாழ் 2 இலட்சம் மக்கள் பயனடைவர்.

அன்புலன்ஸ் படகு கையளிப்பு வைபவம் ஒக்டோபர் மாதம் 27 ம் திகதி வைத்தியசாலை வளவில் மக்கள் விடுதலை முன்னணி அரசியல் குழு உறுப்பினரும் முன்னாள் பாராளமன்ற உறுப்பினருமான தோழர் அனுர குமார திசாநாயக்கா தலைமையில் இடம்பெறும் எனவும் மேற்படி வைபவத்தில் மேல்மாகாணசபை உறுப்பினர் தோழர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தோழி அஞ்சான் உம்மா ஆகியோர். கலந்துகொள்வார்கள் எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் திருகோணமலை மாவட்ட மக்கள் சேவை குழுவினர் தெரிவித்தனர். மேலும் இதுபோன்ற பல பொதுவேலைத்திட்டங்களை முன்னெடுக்க திட்டமிட்டிருப்பதாக மக்கள் சேவைக்குழுவினர் "செஞ்சக்திக்கு" தெரிவித்தனர்.

## ஐக்கிய தேசியக்கட்சி மாநகரசபை குப்பைவண்டி!

விமல் வீரவங்ச

ஐக்கிய தேசியக்கட்சி தற்போது கொழும்பு மாநகரசபை குப்பை வண்டியாக மாறியுள்ளதென மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலர் தோழர் விமல் வீரவங்க தெரிவித்தார். தோட்டங்களின் குப்பைகளையும் பஞ்சிகாவத்தை, மருதானை, மட்டக்குளி போன்ற பகுதிகளின் பல்வேறு விதமான கழிவுகளையும் அள்ளிச்செல்லும் நகரசபை குப்பை லொறிபோன்று ஐக்கிய தேசியக்கட்சியும் புலிகள் இயக்கத்தின் ஆயுதத்திற்கு அடிபணிந்து அவர்களால் ஆட்டுவிக்கப்படும் தமிழ்கட்சிகள் அம்பாறை மாவட்டத்தில் இனவாத அடிப்படையிலான மாவட்டம் கோரும் ரவூப் ஹக்கிம் இவைபோலவே பௌத்த சிங்கள பேரினவாதத்தின் ஊற்றுக்கண்ணான சிங்கள மகாசம்பத "பூமிபுத்திரா" கட்சியின் தலைவர் ஹரிச்சந்திரா விஜயதுங்கா பொதுஜன ஐக்கிய முன்னணியில் காணப்பட்ட மோசடிக்கும்பல்கள் குறிப்பாக எஸ் . பி. திசாநாயக்கா தலைமையிலான கும்பலென குவிந்து காணப்படும் ஐக்கிய தேசியக்கட்சியை அளைப்பதற்கு வேறு மாற்று பெயரில்லை என தோழர் விமல் வீரவங்ச கூறினார்.

ம. வி. முன்னணியின் வெற்றி நிச்சயம்.....
1ம் பக்கத் தொடர்...

வருவதாக தெரியவருகின்றது ஐக்கிய தேசியக்கட்சியின் திட்டத்திற்கமைய தனியார் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையமான ரீ.என்.எல் சேவை விசேட நிகழ்ச்சி நிரல் ஒன்றை தயாரித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

எது எவ்வாறாயினும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் ம.வி.முன்னணி நாட்டுக்கு முன்வைக்கும் தேசத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டமானது எவ்விதமான நிலைகளின் கீழும் நடைமுறைக்கு வருவது உறுதியானது என்பதே பலரின் கருத்தாகும். மக்கள் விடுதலை முன்னணி தனது சக்தியின் மூலமாகவோ, அல்லது அதிகாரத்தைக் கொண்டுள்ள கட்சி மூலமாகவேனும் வேலைத்திட்டத்தை செயற்படுத்தவும் பல வெற்றிகளை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கும் ஏற்புடையதாக சரியான முடிவுகளை மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை நாட்டு மக்கள் மத்தியில் பரவலாக நம்பிக்கை காணப்படுகின்றது.

கருஜயசூரிய "மூட் அவுட்"
8ம்பக்கத் தொடர்.........

ஜெயசூரியா எஸ் . பி . திசாநாயக்காவிற்கு அடுத்ததாகவே அமர்ந்திருந்தார் ரணில் விக்கிரம சிங்கா எஸ் . பி . திசாநாயக்காவை பயன்படுத்தி கரு ஜெயசூரியாவை பின்தள்ளி விடுவதற்கான அறிகுறிகள் காணப்படுவதாக செய்திகள் கூறுகின்றன. இதை அறிந்துகொண்ட கருஜெயசூரியா மனமுடைந்து காணப்படுவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் உள்வீட்டுச்செய்திகள் தெரிவிக்கின்றன.

# எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே

புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் இதனை உலகுக்கு உணர்த்தவே எதிர் வரும் பொதுத்தேர்தலில் நாம் போட்டியிடுவதாக த.வி. கூட்டணி ,ரெலோ, ஈ. பி. ஆர் . எல் . எப் (சுரேஷ் அணி) ஆகிய பிழைப்பு வாத தழிழ்கட்சிகள் கூட்டணி அமைத்து தேர்தல் களத்தில் குதித்திருப்போவதாக தெரிவித்துள்ளனர். இக் கூட்டனியினரின் வெற்றியானது தமிழ் மக்கள் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதற்கான அங்கீகாரம் என்பதே இப்பிழைப்புவாத தமிழ் கட்சிகள். தமிழ் மக்களுக்கு முன்வைக்கும் பிரதான சுலோகமாகும். அதாவது புலி வேடதாரிகளை புலிகளாக ஏற்றுக் கொள்ளச் செய்யும் மிகப் பெரிய தந்திரோபாயமாக இதனைக் கொள்ளலாம்.

உண்மையில் புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிதிநிதிகள் என இப் பிழைப்புவாத தமிழ் கட்சி கூட்டணியினர் ஏற்றுக்கொள்வார்களேயாயின் இவர்கள் தேர்தலை நிராகரிக்கும்படி தமிழ் மக்களை கோரவேண்டும். இதுவே உண்மையாக புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளும் மார்க்கமாகும். ஆனால் இங்கோ தமிழ் மக்களின் வாக்குகளை ஒட்டுமொத்தமாக கொள்ளையடிக்க வசதியாக புலிகள் தான் தழிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற கோஷத்தை இப்பிழைப்புவாத தமிழ்கட்சிகளின் கூட்டணி, மறுபுறமாக தனித்தனியாக ஐ.தே..கட்சியுடன் பேசி உடன் பாடு கண்டு அக்கட்சி தலைமையில் அணிதிரண்டுஆட்சியைக் கைப்பற்றி ,அவ்வாட்சியில் பங்காளிகளாவதில் முனைப்பு கொண்டுள்ளனர். ஆக மொத்தத்தில் ஒன்றுக்கொன்று முரண்பாடான போக்கொன்றையே தமிழ் கட்சியின் கூட்டணியினரிடம் காண முடிகிறது. அதாவது அந்த தமிழ் கட்சி யோக்கிய சிகாமணிகள் தமிழ் மக்களின் காதுகளுக்கும் பூச்சுற்றி வழமைபோல் பாராளுமன்ற பதவி சுகங்களை கைப்பற்றிக் கொள்வதே அவர்களின் தந்திரோபாயமாகும்.

உண்மையான சமாதானத்துக்காக ஏங்கி நிற்கும் தமிழ் மக்களை மீண்டும் ஒரு தடவை ஏமாற்ற திட்டமிடும் பிழைப்புவாத தழிழ் கட்சிகளின் காதில் பூச்சுற்றிவரும் இவர்களை தோற்கடிக்க கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்த தமிழ் மக்கள் தயாராக வேண்டும்.

எம்மால் முடிந்த....
6ம் பக்கத் தொடர்ச்சி

அரசாங்கத்தினால் தீர்க்கமுடியாது. அது வேறாக கலந்துரையாடப்படவேண்டிய பிரச்சினையாகும். உடன்படிக்கையின்படி ஒருவருடத்திற்குள் அதிகாரத்தைப்பங்கிடும் (அதிகாரப்பிரிப்பு) திட்டத்தை முன்வைக்கவேண்டாமென நாம் கூறினோம். தேசியப்பிரச்சினையை தீர்ப்பதென்றால் சமத்துவத்தின் அடிப்படையில் அனைத்து மக்களும் உரிமைகளை வழங்கமுடியும். அத்துடன் மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடிய தீர்வு அவசியமாகும். இவ்விவகாரத்தில் நாட்டின் அனைவரையும் பங்குகொள்ளச் செய்யவேண்டும். அதுபோன்ற நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நாங்கள் யோசனைகளை மேற்கொள்ள உடன்படிக்கையில் இணங்கியுள்ளோம்.

சமாதானப்பேச்சுவார்த்தைபற்றி உடன்படிக்கையில் இல்லாவிட்டாலும் அதைப்பற்றி தெளிவான நிலைப்பாடு எங்களிடம் இருக்கின்றது. அரசாங்கம் மற்றும் வேறுயாராயினும் சரி தேசியப்பிரச்சினையை தீர்ப்பதற்காக L.T.T.E யுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதாயின் கட்டாயமாக L.T.T.E தனி ஈழக் கோரிக்கையை கைவிடுவதாக வெளிப்படையாக தெரிவிக்கவேண்டும் என நாம் நம்புகின்றோம். அதனால் சமாதானப்பேச்சுவார்த்தை பற்றி கருத்துக்களை தெரிவிக்கும் அவ்வாறே பேச்சுவார்த்தையில் ஈடுபடவிரும்பும் அனைவருக்கும் பேச்சுவார்த்தைக்கு முன்னர் தனிநாட்டுக்கோரிக்கையை கைவிடுவதாக பகிரங்கமாக அறிக்கைவிடுமாறு பிரபாகரனை வலியுறுத்துமாறு நாம் வலியுறுத்திக்கேட்கின்றோம். அதை செய்யாமல் நடாத்தும் போலி சமாதானப்பேச்சு வார்த்தையை ம.வி.முன்னணி முழுமையாக எதிர்கின்றது.

செஞ்சக்தி : - நாட்டின் பொருளாதார ஸ்திர நிலையை ஏற்படுத்துவதற்கு தேவையான அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு உதவ ம.வி.முன்னணி இணக்கம் தெரிவித்துள்ளது. என்று உடன்படிக்கையில் அடங்கிய கருத்தை (வியாக்கியானம்) செய்து பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கூறுகின்றது. ம . வி . முன்னணி அரசாங்கத்தின் கைதியாக உள்ளதா? இல்லையா ?என் பதைப் பற்றி


தோழர் டி . சில்வா : - இந்த உடன்படிக்கையின் பிரகாரம் ம.வி.முன்னணி அரசாங்கத்தின் கைதியல்லாததைப்போன்றே அரசாங்கமும் ம.வி.முன்னணியின் கைதியல்ல. அரசாங்கம் எங்களுக்கு அடிபணிந்தோ நாம் அரசாங்கத்திற்கு அடிபணிந்தோ இல்லை அவ்வாறான பிரச்சனை இங்கு இருக்கமுடியாது. அரசாங்கம் அடிப்ணிய வேண்டியது மக்களிடமாகும். மக்களின் தேவைகளுக்காகத்தான். இந்த உடன்படிக்கையின் பிரகாரம் சிறிதளவாவது அரசாங்கம் மக்களின் கட்டளைகளுக்கு (தேவைகளுக்கு) அடிபணிந்துள்ளது.
உடன்படிக்கையின்படி அரசாங்கம் உடன்படிக்கையின் நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டியதுடன் அந்த நிபந்தனைகள் நிறைவேற்றும் வரையான காலப்பகுதிகளில் ம.வி.முன்னணி பாராளமன்றத்தினுள் அரசாங்கத்தை தோல்வியிலிருந்து பாதுகாக்கும். நாட்டின் ஸ்திரத்தன்மையைத் தொடர்ந்து கொண்டு செல்வதற்கும் ஸ்திரமின்மையை ஏற்படுத்தாமல் இருப்பதும் அனைவரினதும் கடமையாகும். ஆனால் அரசாங்கம் எந்த விதத்திலும் இந்த உடன்படிக்கையில் ஒரு நிபந்தனையையாவது மீறினால் நாம் உடனடியாக நிபந்தனையிலிருந்து வெளியேறுவோம். அந்த உரிமையை எம்மிடம் வைத்துக்கொண்டே நாம் செயற்படுகின்றோம். ஆதலினால் மக்கள் விடுதலை முன்னணியை ஏமாற்ற முடியுமென்றோ , ம.வி.முன்னணியை சிறைப்படுத்த முடியுமொன்றோ யாராயினும் நினைத்தால் அது வெறும் கற்பனையாகும் எனக்கூறமுடியும். ம.வி.முன்னணி தமது தனித்துவத்தை , தமது குறிக்கோளை , தமது கொள்கைகளை எந்த தினத்திலும் எவரின் முன்னிலையிலும் கடந்த காலத்தில் காட்டிக்கொடுக்காததை (தாரைவார்க்காததை) போன்றே நிகழ் காலத்திலும் அவ்வாறே எதிர்காலத்திலும் காட்டிக்கொடுக்க மாட்டோம். என்று நாம் எமது மக்களுக்கு தெளிவாகவும் உறுதியாகவும் தெரிவிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சக்தி

198-19 பஞ்சிகாவத்தை வீதி,கொழும்பு 10. தொலைபேசி 345594 E-mail-niyamua@isplanka.lk

# வென்றெடுத்த மக்கள் வெற்றிகளை பாதுகாத்துக் கொள்வது எப்படி?



கப்பம் பதவி அரசியலை தோற்கடி வென்றெடுத்தத்த மக்களின் உரிமைகளை பாதுகாப்பது எப்படி? என்ற தலைப்பில் கடந்த 4ம திகதி நுகேகொடையில் நடைபெற்ற ம.வி.மு. பொதுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் தோழர் ரில்வின் சில்வா, பிரச்சார செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தோழர் விமல் வீரவங்ச, மாகாண சபை உறுப்பினர் தோழர் இராமலிங்கமசந்திரசேகர் ஆகியோர்கள் உரையாற்றுவதையும்,கூட்டத்திற்கு வெள்ளமென திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின் ஒரு பகுதியினரையும் கூட்டத்திற்காக அமைக்கப்பட்ட மேடையையும் படத்தில் காண்கிறீகள்.

## சீனாவின் சோஷலிசம் நீடுழி வாழ்க!

### மக்கள் விடுதலை முன்னணி அரசியல்குழு

சிரேஷ்ட சீன சோஷலிச புரட்சியின் 52 வது ஆண்டுவிழவையொட்டி அதன் நிமித்தமாக மக்கள் விடுதலை முன்னணி அரசியல் குழு சீன மக்கள் அரசாங்கத்தின் கம்யூனிஸ்ட கட்சிக்கும், வீரமிகு சீன மக்களுக்கும் தனது உணர்ச்சிகரமான வாழ்த்துக்களை தெரிவித்து அனுப்பிவைத்த கடிதம் கீழ்வருமாறு.

"பொதுச்செயலாளர் ,
சீன கம்யூனிஷ்ட் கட்சி,
அன்பிற்கினிய தோழர்களே,
சீனாவின் சோஷலிசம் நீடுழி வாழ்க !

சிரேஷ்ட சீனப்புரட்சியின் 52 வது விழாவை முன்னிட்டு மக்கள் விடுதலை முன்னணி அரசியல் குழு சீன மக்கள் குடியரசின் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் , வீரமிகு சீன மக்களுக்கும் தனது உளப்பூர்வமான வாழ்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.

மக்கள் சீன குடியரசின் பொருளாதாரமானது, தற்போதைய உலகில் அதிவேகமான வளர்ச்சியை சொந்தமாக கொண்டுள்ள பொருளாதாரமாகும். அண்மித்த எதிர்காலத்தில் சீன மக்கள் அரசாங்கத்தின் பொருளாதாரம் உலகின் முன்னணி பொருளாதாரமாக மிளிர வேண்டுமென நாம் பிரார்த்திக்கின்றோம். அது அவ்வாறு நிகழ்வாகும்போது சோஷலிசத்தின் மீது களங்கமற்ற நம்பிக்கை வைத்திருக்கின்ற பல லட்சக்கணக்கான ஒடுக்கப்பட்ட மக்களது தன்னம்பிக்கையும் , வலுவும் உயருமென்பதில் எள்ளவும்சந்தேகமில்லை.

உலகில் அதிக சனத்தொகையைக் கொண்டிருக்கும் சீன குடிரசானது 1945 முன்னய பல தசாப்தங்களாக ஏகாதிபத்தியவாதிகளால் சுரண்டி சூறையாடப்பட்டது. சீனப் புரட்சியின் மூலம் சீனாவினதும் , அந்நாட்டு மக்களினதும் தலைவிதியை மீள திருப்பமுடியாதளவு மாற்றியமைத்துள்ளது. கடந்த 52 வருடங்களில் சீன கம்யூனிஸ்ட் கட்சியானது இப்பூமிப்பரப்பில் உன்னத நிலையையும் , சுமார் 200 கோடி ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமஉரிமைகளையும் , சமசந்தர்பத்தினையும் , உறுதிப்படுத்திய இடமாகவும் அழகிய தேசமாக மாற்றியமைத்துள்ளது.

காலனித்துவவாதிகளின் சுரண்டலுக்கு உள்ளான உலகின் வறிய நாடுகளுக்கு சீன கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தலைவர்களும் , மக்கள் சீன குடியரசின் வீரமிகு மக்களும் அதிர்ஷ்ட புதல்வர்கள் என்பதில் எமக்கு எந்த விதமான சந்தேகமும் இல்லை.

கொடிய வறுமைக்கு தள்ளப்பட்டிருந்த சீனதேசமானது , இன்று பெற்றுள்ள கற்பனை செய்து பார்க்க முடியாதத வெற்றிகளுக்குப்பின்னாலிருக்கும் இரகசியம் , தூரநோக்குள்ள தேசபக்த சீன தலைவர்களினதும் வீரமிகுந்த மக்களினதும் அற்பணிப்பும் நேர்மையுமாகும்.

மக்கள் சீன குடியரசு உலக மக்களின் பெருமைக்குரிய நாயகனாக திகழ்கின்றது. மக்கள் சீன குடியரசு பின்பற்றிவரும் சமாதானமும் சகவாழ்வும் புரிந்துணர்வு கௌரவத்தின்மீது அடிப்படையிலான வெளிநாட்டுக் கொள்கையினை நாங்கள் மதிக்கின்றோம்.

இச்சந்தர்பத்தில் சோஷலிசத்திற்கு எதிராக சீனாவின் உள்ளேயும் அதன் வெளியேயும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு மிக்க தாக்குதலை தோல்வியுறச்செய்வதற்காக மக்கள் சீனக்குடியரசின் கம்யூனிஸ்ட் கட்சியும் , அதன் மக்களும் கொண்டுசெல்கின்ற போராட்டத்திற்கு எமது முழுமையானதும் நிபந்தனையற்றதுமான ஆதரவினை மீண்டும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மக்கள் சீன குடியரசு நீடுழி வாழ்க !
சீன சோஷலிச புரட்சி வெல்க !
சீன கம்யூனிஸ்ட் கட்சி நீடுழிவாழ்க !
சோஷலிசம் நீடுழி வாழ்க!

**அரசியல் குழு**
**மக்கள் வீடுதலை முன்னணி**
**2001.10.01**

## நம்பிக்கையில்லாத் தீர்மான தமிழ் கட்சிகளுக்கு பகிரங்க சவால்!

பொ.ஐ.முன்னணிக்கு எதிராக ஐ.தே. கட்சி தலைமையில் அணிதிரண்டிருக்கும் தமிழ் கட்சிகளுக்கும் ஐ.தே. கட்சிக்கும் இடையிலான வலுவான உடன்பாடொன்று உண்டு. என தெரிய வருகிறது பிழைப்புவாத தழிழ்கட்சிகளைப் பொறுத்தவரை அவர்களின் அரசியல் மூலதனம் தேசியப் பிரச்சினை என்பது வெளிப்படையானது. அந்த வகையில் ஐ.தே.கட்சிக்கும் அந்த விவஸ்தை கெட்ட தமிழ் கட்சிகளுக்கும் இடையில் உடன்பாடு காணப்பட்டிருக்க வேண்டிய ஒரே பிரச்சனைக்கான தீர்வாக முன்வைத்திருக்கும் திட்டம் என்ன? ஐ.தே.கட்சி முன்வைத்த தீர்வு திட்டத்தை நீங்கள் முழுமையாக ஏற்றுக் கொள்கிறீர்களா? யுத்தம் நிறுத்தப்படுமா ?அடாவடித்தானம், தடுப்புக் காவல்களுக்கு அனுசரனையான பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படுமா?வடக்கு -கிழக்கின் சகல அதிகாரங்களும் தமிழ் அரசியல் வாதிகளிடம் ஒப்படைக்கப்படுமா? அல்லது புலிகளுடன் பேசுவோம் என்ற மொட்டைத்தனமான வாக்குறிதி மட்டும்தான?

புலிகளுடன் பேசி உடன்பட்டு காணப்படாதவிடத்து நீங்கள் மேற்கொள்ளத்திட்டமிட்டிருக்கும் அரசியல் நடவடிக்கை தான் என்ன ?

இன்று நீங்கள் தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டிய விடயங்களில் சிலவற்றை மேலே வினாவாகத் தொடுக்கப்பட்டுள்ளது எனவே அம் மக்களுக்கு உண்மை நிலவரத்தை வெளிப்படுத்துங்கள் ஐ.தே.கட்சியுடனான உடன்படிக்கையை அம்பலப்படுத்துங்கள்.

## தமிழினத்தின் தனித்துவம் காக்கும் தமிழ் கட்சிகள்!

அரசியலமைப்பின் 17வது திருத்திற்கமைய மறுசீரமைப்பு பேரவைக்குத் தனித்தனியாக உறுப்பினர்களை தெரிவுசெய்யும் விடயத்தில் வட-கிழக்கு தமிழ் கட்சிகளுக்கும் மற்றும் மலையக தமிழ் கட்சிகளுக்கும் இடையில் தனிப்பட்ட போட்டா போட்டிகள் உருவாகியிருக் கிறது. நம்பிக்கையில்லா தீர்மான தமிழ் கட்சிகளான தமிழர் விடுதலை கூட்டனி, ரெலோ, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தாம் விருப்புக்கேற்ற ஒருவரை சிபார்சு செய்வதில் அக்கறை செலுத்தும் அதேவேளை , ஈ.பி.டி.பி யும் தாம் விரும்பும் ஒருவரை நியமிப்பதில் முனைப்புக் கொண்டுள்ளனர். மறுபுறமாக மலையக தமிழ் கட்சிகளான இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி இணைந்து ஒருவரை சிபார்சு செய்ய மலைகத்தில் ஐ. தே. க சார்பான தமிழ் பிரதிநிதிகள் தமக்கு வேண்டிய ஒருவரை சிபார்சு செய்வதில் அக்கறை கொண்டுள்ளனர்.

அரசியலமைப்பு பேரவை ஐப்பசி திங்கள் 05 ம் நாள் பூர்த்திசெய்யப்பட வேண்டும் என்பது மக்கள் விடுதலை முன்னணியின் கால அட்டவனையாகும். தமிழ் கட்சிகளின் சுயநல கயிறிழுப்பு விவகாரத்தால் குறிப்பிட்ட தினத்தில் அரசியலமைப்பு பேரவையை நியமிக்க முடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. ஆக இந்நாட்டு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை பேணுவதற்கேற்புடையதான சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பான அரசியலமைப்பு பேரவை நியமன விவகாரம் தமிழ் கட்சிகளின் ஆதிக்க கயிறிழுப்பு போட்டியால் பின்தள்ளப்பட்டிருக்கிறது.

மேற்படி 17 வது திருத்த சட்டமூலம் செப்: 24 ம் திகதி பாராளுமன்றத்தில் விவாதித்து வாக்கெடுப்புக்கு தயாரானப்போது, இனப் பிரச்சினைக்கு தீர்வுக் காணப்படாமல் எந்த ஆணைக்குழுக்கள் அமைத்தாலும் பயனில்லையென விதண்டாவாதம் புரிந்து வாக்கெடுப்பை நிராகரித்து பாராளுமன்றத்தைவிட்டு வெளியேறிய தமிழ் கட்சித் தலைவர்கள் பயனற்ற ஒன்றுக்காக பாத்திரம் ஏந்தி நிற்பதேன்? எந்த மக்களளின் விடிவுக்காக இப்பதவி போட்டியில் குதித்துள்ளர்கள்? என்பது விளங்கிக்கொள்ள முடியாத ஒன்றல்ல. மறுபுறமாக அரசிலமைப்பு பேரவை உறுப்பினர் விடயத்தில் ஆளுக்கொரு பக்கமாக போட்டிப்போடும் இவர்களால் தேசியப் பிரச்சினை போன்ற சிக்கள் மிகுந்த பிரச்சினைகளில் எப்படி உடன்படப்போகிறார்கள் என்பதை தமிழ் மக்கள் உணர்ந்துக் கொள்ளவேண்டும். மொத்தில் இவர்களின் அனைத்துப் பிரச்சினைகளும் அதிகார ஆதிக்கத்தை மையமாகக் கொண்டவை என்பதை மீண்டும் ஒரு தடவை நிரூபித்திருக்கிறார்கள்.

## கரு ஜெயசூரியா "மூட்அவுட்"

எஸ். பி. திசாநாயக்கா ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்ததன் பின்பதாக கருஜெயசூரியா மூன்றாவது நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது அண்மையில் ஐக்கிய தேசியக்கட்சி சார்பாக ரணில் விக்கிரம சிங்க தலைமையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின்போது ரணில் விக்கிரம சிங்காவின் இருபக்கத்திலும் அமர்ந்திருந்தோர் ஆனந்த சங்கரியும் எஸ். பி . திசாநாயக்கவுமேயாகும். இங்கு கரு

*7ம் பக்கம் பார்க்க.....*

கொழும்பு 10, பஞ்சிகாவத்தை வீதி, இல: 198-19 ல் வசிக்கும் டில்வின் சில்வா ஆகிய என்னால், இல: 70 மிசன் வீதி பிடககோட்டையிலுள்ள, ஆர். சி பிரிண்டர்ஸ் அன்ட் பப்லிஸஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org